மலர் 8 • இதழ் 6 • அக்டோபர் 2023 • ரூ.20/-

AGARAM FOUNDATION
அறம் செய விரும்பு

# யாதும்

நமது கல்வி - நமது சூழல் - நமது பணி

## அறிவியலுக்கு வரவேண்டும் பெண்கள்!

## கல்வி விதைநெல்லைக் காப்போம்!



## உச்சகட்ட உளைச்சல் தரும் கோச்சிங் முறை!

## மரம் வளர்ப்போம்
## மழை பெறுவோம்




சமுதாய நலன் கருதி வெளியிடுவோர்




**சக்தி ® மசாலா**




**சக்திமசாலா பிரைவேட் லிமிடெட்**
6, மாமரத்துப்பாளையம், ஈரோடு - 638 004.
போன் : 0424 - 2533601.
E-mail : headoffice@sakthimasala.co.in
www.sakthimasala.com

• **சக்தி** மசாலா சமையல் பொடி வகைகள் • **சக்தி** ஊறுகாய் வகைகள் • **சக்தி** சன் பிளவர் ஆயில் • **சக்தி** பருப்பு வகைகள்
• **சக்தி** பஜ்ஜி போண்டா மாவு • **சக்தி** ராகி மாவு • **சக்தி** கடலை மாவு • **சக்தி** அப்பளம் • நெய்

ENGINEERING | ARCHITECTURE | DENTAL | RESEARCH | ARTS & SCIENCE

# YOUR CAREER BEGINS WITH US






COURSES AVAILABLE

Aeronautical | Automobile | Bioinformatics | Biomedical | Biotechnology | Chemical | Civil | Computer Science and Engineering | Electrical and Electronics | Electronics and Communication | Electronics and Telecommunication | Electronics and Instrumentation | Information Technology | Mechanical | Mechanical and Production | Bachelor of Architecture (B.Arch.) | Bachelor of Dental Surgery (BDS)

100% PLACEMENT OPPORTUNITY

ADMIRABLE INFRASTRUCTURE

WORLD CLASS ACADEMIC AMBIENCE

EMINENT FACULTY

## SATHYABAMA UNIVERSITY

(Established under section 3 of the UGC Act, 1956)
Declared as Category " A " University by MHRD, Government of India

facebook.com/SathyabamaUniversityOfficial

www.sathyabamauniversity.ac.in

Jeppiaar Nagar, Rajiv Gandhi Salai, Chennai - 600 119.

Phone : Administrative Office: 044-2450 3150 / 51 / 52 / 53 / 54 / 55 | Entrance Exam Office: 044-24502436 | Fax : 044 - 2450 2344

**அனைவருக்கும் அன்பு வணக்கம்.**

பெண்கல்வியை மேம்படுத்தச் சிறப்பாக முன்னெடுப்புகள் செய்யும் திட்டங்களுக்கு ஆண்டுதோறும் யுனெஸ்கோ நிறுவனம் பரிசளித்து வருகிறது. நவீனத் தொழில்நுட்பங்கள் உச்சம் தொட்டிருக்கும் இந்தக் காலத்திலும் இப்படி ஒரு பரிசை ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, அறிவியல் மற்றும் கலாசார அமைப்பு வழங்க வேண்டிய சூழல் இருக்கிறது என்றால், பெண்கல்வியின் நிலை குறித்து நாம் கவலைப்பட்டாக வேண்டும்.

“கடந்த 1995–ம் ஆண்டு பெண்கள் உரிமைக்கான ஐ.நா பிரகடனத்தை உலக நாடுகள் ஏற்றன. அதன்பின்னர்தான் பல நாடுகளில் பெண்கல்வியில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டது. இப்போது உலகெங்கிலும் 90% சிறுமிகள் பள்ளிகளைச் சென்றடைந்துள்ளனர், 40% பெண்கள் உயர்கல்வியை எட்டியிருக்கிறார்கள். இந்த நிலை இன்னமும் மேம்பட வேண்டும். ஏனெனில், இப்போது கல்வியறிவு இல்லாமல் இருப்போரில், மூன்றில் இரண்டு மடங்கு பேர் பெண்கள்தான்'' என்கிறார் யுனெஸ்கோ அமைப்பின் தலைவர் ஆட்ரே அஸுலே.

மானுட இனத்தில் சரிபாதி பெண்கள் என்றால், அவர்கள் எல்லா இடங்களிலும் சமநிலை பெற வேண்டும். அதிகாரத்திலும் அந்த சமநீதி நிலைக்க வேண்டும். அது இயல்பாக நடக்கவில்லை என்பதால்தான், சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் கடந்த பின்னரும் ‘நாடாளுமன்றத்திலும் சட்டமன்றங்களிலும் மகளிருக்கு 33% இட ஒதுக்கீடு அளிக்க’த் தனிச் சட்டம் தேவைப்படுகிறது.

அரசியலில் பெண்களுக்கான இடம் சுருங்கிப் போனது போலவே, அறிவியலிலும் அவர்களின் பங்கு சுருங்கியிருக்கிறது. சமீபத்தில் சந்திரயான்–3 விண்கலம் விண்ணில் ஏவப்பட்டபோது, அந்தச் சாதனையைச் செய்த இஸ்ரோ அமைப்பின் கட்டுப்பாட்டு அறையில் கணிசமான பெண் விஞ்ஞானிகள் இருந்ததைப் பார்த்தோம். அதன் தொடர்ச்சியாக, சூரியனை ஆய்வுசெய்ய ஆதித்யா எல்–1 விண்கலம் ஏவப்பட்டது. அதன் திட்ட இயக்குநர் பதவி வகித்தவர், தமிழ்நாட்டைச் சேர்ந்த பெண் விஞ்ஞானி நிகர் ஷாஜி. இவர்களின் வரிசையில் இன்னும் நிறைய பெண்கள் வர வேண்டும் என்பதே நம் எதிர்பார்ப்பு.

உலகின் 114 நாடுகளில் உலக வங்கி எடுத்திருக்கும் ஒரு புள்ளிவிவரத்தின்படி, அவற்றில் 107 நாடுகளில் ஆண்களைவிடப் பெண்கள் குறைவாகவே உயர்கல்வி நிலையங்களைச் சென்றடைகிறார்கள்.

# அறிவியலுக்கு வரவேண்டும் பெண்கள்!



அவர்களிலும் அறிவியல், தொழில்நுட்பம், எஞ்சினியரிங் மற்றும் கணிதம் ஆகிய அறிவியல் வளர்ச்சிக்கு உதவும் STEM பாடங்களைப் படிப்பவர்கள் குறைவு.

பள்ளிப் படிப்பை முடிக்கும் மாணவர்களில் 35% பேர் STEM கல்வியை நாடுகிறார்கள் என்றால், மாணவிகளில் 18% பேரே STEM பிரிவுகளில் சேர்கிறார்கள். அந்தப் பெண்களுமே உயிரியல் சார்ந்த மருத்துவம், நர்சிங் போன்ற பிரிவுகளில் சேர்வதையே வழக்கமாக வைத்திருக்கிறார்கள். எலெக்ட்ரிக்கல், மெக்கானிக்கல் போன்ற பிரிவுகளில் சேர்வது குறைவு. உலக அளவில் இருக்கும் ஆராய்ச்சியாளர்களில் 33% பேரே பெண்கள். எஞ்சினியரிங் பட்டதாரிகளில் 28% பேர் மட்டுமே பெண்கள். குறிப்பாக, செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத் துறையில் 22% பேரே பெண்கள் இருக்கிறார்கள்.

உலக அளவில் STEM பட்டதாரிகளில் அதிகம் பெண்களை உருவாக்கும் நாடாக இந்தியா இருக்கிறது. இந்தியாவில் STEM பிரிவில் பட்டம் பெறுவோரில் 43% பேர் பெண்கள். ஆனால், ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் உயர்கல்வி அமைப்புகளில் விஞ்ஞானிகளாகவும் தொழில்நுட்ப வல்லுநர்களாகவும் இருப்போரில் பெண்களின் பங்கு வெறும் 14% மட்டுமே! இந்த இடைவெளி குறைய வேண்டும்.

STEM பிரிவுகளில் சேர்ந்து படிப்பது ஒவ்வொரு பெண்ணின் திறமையையும் வளர்த்தெடுக்கும், அவருக்குள் இருக்கும் கற்பனைத்திறனை விரிவாக்கும், சிறந்த வேலைவாய்ப்புகளை அவருக்கு அளிக்கும். காலம் காலமாக ஆண்கள் ஆதிக்கம் செலுத்தும் பல்வேறு துறைகளில் பெண்கள் சரிசமமான வாய்ப்புகளைப் பெறுவது மட்டுமே சமூகத்தில் அவர்களின் சமநிலையை உறுதி செய்யும். இதுபோன்ற அறிவியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில், நிறைய பெண்கள் தலைமைப்பொறுப்பில் இருந்தால்தான், அவர்களை ரோல்மாடலாக எடுத்துக்கொண்டு அடுத்த தலைமுறைப் பெண்கள் முன்னேறுவார்கள். வறுமை, சமூகத்தில் இருக்கும் தவறான நம்பிக்கைகள், தாழ்வு மனப்பான்மை என்று அவர்களுக்கு முன்பாக இருக்கும் பல்வேறு தடைகள் தகர்க்கப்படும்.

பெண்கள் இயல்பாகவே வித்தியாசமாகச் சிந்திப்பவர்கள், பிரச்னைகளுக்குப் புதுமையான வழிகளில் தீர்வு தேடும் இயல்புள்ளவர்கள், புதுமைகளை உருவாக்குவதில் ஆர்வமுள்ளவர்கள். அவர்களுக்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் கல்வி வாய்ப்புகளும் வேலைவாய்ப்புகளும் கிடைப்பது அவர்களை மட்டுமில்லை, தேசத்தையும் முன்னேற்றும்.

அன்புடன்,

**சூர்யா**

நிறுவனர் - அகரம் பவுண்டேஷன்




**யாதும்**

நமது கல்வி - நமது சூழல் - நமது பணி

தமிழ் மாத இதழ்

மலர் 8 • இதழ் 6

அக்டோபர் 2023

கௌரவ ஆசிரியர்

**திரு.சூர்யா**

பதிப்பாளர் - ஆசிரியர்

**த.செ.ஞானவேல்**

இதழாசிரியர்

**வள்ளி**

வடிவமைப்பு

**கே.உதயா**

புத்தக ஆக்கமும் வடிவமைப்பும்:

தரு மீடியா (பி) லிட்.,

10/55, ராஜு தெரு,

மேற்கு மாம்பலம்,

சென்னை - 600 033

தொலைபேசி : 9952920801



இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.



Published by T.J.Gnanavel,
on behalf of
Tharu Media (P) Ltd.,
10/55,Raju Street,
West Mambalam,
Chennai - 600 033.
email:
contactyadhum@gmail.com

# கனடாவைத் தவிர்க்கும் மாணவர்கள்!




இந்திய மாணவர்கள் உயர்கல்விக்காக அதிகம் செல்லும் நாடுகளில் ஒன்றாக கனடா இருக்கிறது. கடந்த 2022–ம் ஆண்டு 1,83,310 மாணவர்கள் அங்கு படிக்கச் சென்றனர். கனடாவில் படித்து முடித்து அங்கேயே பணிபுரிய வொர்க் பர்மிட் எளிதில் கிடைப்பதும் முக்கியமான ஒரு காரணம். ஆனால், காலிஸ்தான் தீவிரவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்ட விவகாரத்தில் இந்தியாவைக் கனடா குற்றம் சாட்டியுள்ள நிலையில், உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு போன்றவற்றுக்காக இந்திய மாணவர்கள், இளைஞர்கள் கனடா செல்வதைத் தவிர்க்கத் தொடங்கியுள்ளனர்.




அங்கு கல்வி பயிலும் இந்திய மாணவர்கள், வேலை பார்க்கும் இந்திய இளைஞர்கள் மீது வெறுப்புணர்வு ஏற்படலாம் என்ற அச்சம் நிலவுகிறது. அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவில் உள்ள இந்தியர்கள் மீது இனரீதியான தாக்குதல்கள் அவ்வப்போது நடைபெற்று வருகின்றன. அதுபோன்ற நிலை கனடாவிலும் ஏற்படலாம் என்பதால், மாணவர்கள் எச்சரிக்கையுடன் இருத்தல் அவசியம் என்று கூறப்பட்டுள்ளது. இதனால் கனடாவைத் தவிர்த்துவிட்டுப் பலரும் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, அயர்லாந்து நாடுகளை நாடிப் போகிறார்கள்.

# ஒரே கல்வி சாத்தியமில்லை!

'ஒரே நாடு ஒரே தேர்தல்' என்பது போல 'ஒரே' மாதிரிப் பல விஷயங்களை அமல் செய்கிறது மத்திய அரசு. இந்த நிலையில் பா.ஜ.க–வைச் சேர்ந்த தலைவரான அஸ்வினி உபாத்யாய் என்பவர், 'இந்தியா முழுக்க ஒரே கல்வி வாரியத்தைக் கொண்டுவர வேண்டும். பிளஸ் 2 வரை எல்லோருக்கும் ஒரே பாடத்திட்டத்தை அமல் செய்ய வேண்டும்' என்று டெல்லி உயர் நீதிமன்றத்தில் பொது நல வழக்குத் தொடர்ந்தார். இதற்கு மத்திய அரசு சார்பில் சி.பி.எஸ்.இ கல்வி வாரியம் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

'கல்வி என்பது மத்திய அரசுப் பட்டியலிலும் இல்லாமல், மாநில அரசின் பட்டியலிலும் இல்லாமல், பொதுப் பட்டியலில் இருக்கிறது. நாட்டில் பெரும்பாலான பள்ளிகள் மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ளன. பாடத்திட்டத்தை உருவாக்குவது, தேர்வுகள் நடத்துவது எல்லாமே மாநில அரசே செய்கிறது. மாநில மக்கள் பேசும் மொழியில், அவர்களின் கலாசாரத்தை வெளிப்படுத்தும் வகையில் பாடத்திட்டம் இருக்க வேண்டும். பள்ளிக்கு வெளியில் ஒரு குழந்தை வாழும் வாழ்க்கையை அந்தப் பாடநூல் பிரதிபலிக்க வேண்டும். எனவேதான் வெவ்வேறு பாடத்திட்டங்கள் தேவைப்படுகின்றன' என்று நீதிமன்றத்தில் சி.பி.எஸ்.இ கல்வி வாரியம் தெரிவித்துள்ளது. இதன்மூலம் 'ஒரே நாடு ஒரே பாடத்திட்டம் நடைமுறையில் சாத்தியமில்லாதது' என மத்திய அரசே தெரிவித்துள்ளது.

CENTRAL BOARD OF SECONDARY EDUCATION
INDIA
असतो मा सद्गमय

# முன்னேறும் உயர்கல்வி ரேங்கிங்!

உலக அளவில் உயர்கல்வி நிறுவனங்களுக்குப் பல்வேறு தரவரிசைகள் வெளியிடப்படும். அவற்றில் முக்கியமானது, THE எனப்படும் Times Higher Education ரேங்கிங். இந்த ஆண்டு வெளியிடப்பட்டுள்ள தரவரிசையில் எப்போதும் இல்லாத அளவுக்கு 91 இந்தியப் பல்கலைக்கழகங்கள் இடம்பிடித்துள்ளன. இந்தத் தரவரிசையில் வெளிப்படைத்தன்மை இல்லை என்று மும்பை மற்றும் சென்னை ஐ.ஐ.டி உள்பட நாட்டின் பழமையான ஐ.ஐ.டி–க்கள் கடந்த நான்கு ஆண்டுகளாக இந்த ரேங்கிங்கைப் புறக்கணித்து வருகின்றன. என்றபோதும் மற்ற நிறுவனங்கள் இதில் பங்கேற்கின்றன.

உலகின் 108 நாடுகளில் இருக்கும் 1,904 பல்கலைக்கழகங்களை உள்ளடக்கி இந்தத் தரவரிசை வெளியிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இதில் இந்திய அளவில் முதலிடம் பிடித்திருப்பது, பெங்களூரு இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆப் சயின்ஸ். உலக அளவில் 250 கல்வி நிலையங்களுக்குள் இது வந்துள்ளது. தமிழகத்திலிருந்து அண்ணா பல்கலை, காரைக்குடி அழகப்பா பல்கலை, கோவை பாரதியார் பல்கலை, சென்னை சவீதா பல்கலைக்கழகம், வேலூர் வி.ஐ.டி பல்கலை, ஸ்ரீவில்லிபுத்தூர் கலசலிங்கம் பல்கலை, திருச்சி என்.ஐ.டி., சென்னை கிரஸண்ட், கோவை காருண்யா, தஞ்சாவூர் சாஸ்த்ரா, சென்னை சத்யபாமா பல்கலைக்கழகம், சென்னை எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழகம், மதுரை தியாகராஜர் கல்லூரி போன்றவை இதில் இடம்பிடித்துள்ளன. அதிக கல்வி நிறுவனங்கள் இடம்பிடித்த வரிசையில் இந்தியா நான்காம் இடம் பெற்றுள்ளது.

# போலி பல்கலைக்கழகங்கள் பட்டியல்!

இந்தியாவில் இருக்கும் கல்வி நிறுவனங்களில் எவை எவை போலிப் பல்கலைக்கழகங்கள் என்று பல்கலைக்கழக மானியக் குழு பட்டியல் வெளியிட்டுள்ளது. இவை தரும் பட்டங்கள் செல்லாது என்று எச்சரிக்கை அறிவிப்பு வெளியிட்டதுடன், இந்தப் பல்கலைக்கழகங்களுக்கும் நோட்டீஸ் அனுப்பியுள்ளது. 'மாணவர்கள் இவற்றில் சேர வேண்டாம்' என்றும் எச்சரித்துள்ளது. போலிப் பல்கலைக்கழகங்கள் பட்டியல் இதோ:




ஆந்திரப் பிரதேசம்: Christ New Testament Deemed University, Bible Open University of India. டெல்லி: All India Institute of Public & Physical Health Sciences (AIIPHS) State Government University, Commercial University Ltd, United Nations University, Vocational University, ADR–Centric Juridical University, Indian Institute of Science and Engineering, Viswakarma Open University for Self–Employment, Adhyatmik Vishwavidyalaya. கர்நாடகா: Badaganvi Sarkar World Open University Education Society. கேரளா: St. John's University. மகாராஷ்டிரா: Raja Arabic University. புதுச்சேரி: Sree Bodhi Academy of Higher Education. உத்தரப் பிரதேசம்: Gandhi Hindi Vidyapith, National University of Electro Complex Homeopathy, Netaji Subhash Chandra Bose University, Bhartiya Shiksha Parishad. மேற்கு வங்காளம்: Indian Institute of Alternative Medicine, Institute of Alternative Medicine and Research.



# கல்வி விதைநெல்லைக் காப்போம்!

தமிழ்நாட்டுக் கல்வித்துறையானது நிர்வாக வசதிக்காக பள்ளிக்கல்வி, உயர்கல்வி என்று பிரிக்கப்பட்டுள்ளது. இதில் குறிப்பாக உயர்கல்வி மாணவர் சேர்க்கை விகிதத்தில் இந்திய அளவில் தமிழ்நாடு முன்னணியில் இருந்து வருகிறது. பள்ளிக் கல்வித்துறையில் முந்தைய ஆண்டுகளில் செய்யப்பட்ட காத்திரமான முன்னெடுப்புகளே இதற்குக் கரணம். அதேபோல இங்குள்ள உயர்கல்விக் கட்டமைப்பு வசதிகள் மாணவர் சேர்க்கையில் முக்கியப் பங்காற்றுகின்றன என்பதையும் மறுக்க முடியாது. மாநில அரசின் நிதி ஒதுக்கீடு, காலை உணவு, மிதிவண்டி, புதிய புதிய முன்னெடுப்புகள் ஆகியவற்றில் பள்ளிக்கல்வித் துறைக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் வரவேற்புக்குரியது. ஆனால், உயர்கல்வித் துறையில், மாணவர் சேர்க்கை எண்ணிக்கைக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம், அவர்களின் வளர்ச்சிக்குக் கொடுக்கப்படுவதில்லை என்கிற குரல்கள் ஒலிக்கின்றன. இந்தக் குரலுக்கு நாம் செவிசாய்த்தே ஆக வேண்டும்.

அதாவது, உயர்கல்வி மாணவர்களின் வளர்ச்சியில் மாணவர் – ஆசிரியர் விகிதம் (student teacher ratio – STR), பேராசிரியர்கள் பற்றாக்குறை, அவர்களுக்கான குறைந்த ஊதியம் (கௌரவ விரிவுரையாளர்கள்) போன்ற பிரச்னைகள் சில அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகளால் பொதுவெளியில் பேசுபொருளாகியுள்ளன. துறைவாரியாகக் குறைந்தபட்சம் நான்கு முதல் அதிகபட்சம் பத்து பேர் வரை பேராசிரியர்கள் பற்றாக்குறை நிலவுவதைப் பல அரசுக் கல்லூரிகளில் பார்க்க முடிகிறது. தனியார் கல்லூரிகளிலும் மாணவர் – ஆசிரியர் விகிதத்திற்கு ஏற்பப் பேராசிரியர்களின் எண்ணிக்கை இல்லை.

பள்ளிக்கல்வி முடித்து அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் உயர்கல்வியை நோக்கி வருவதற்கு அரசின் திட்டங்கள் ஒரு காரணம். ஏற்கனவே தரமான உயர்கல்வியைப் பெற்ற மாணவர்கள் இன்றைக்குப் பள்ளிகளில் ஆசிரியர்களாகப் பணியாற்றுகின்றனர் என்பதும் ஒரு முக்கியக் காரணம். மேலும், அடுத்தகட்டமாகப் பள்ளிக்கல்வியைப் பயிற்றுவிப்பதற்கு இன்றைக்கு உயர்கல்வி பயின்றுவரும் மாணவர்களைத் தயார் செய்ய வேண்டியதும் அரசின் கடமை. கடந்த கால விளைச்சலான மகசூலில் இருந்தே (ஏற்கனவே உயர்கல்வி பயின்ற) இன்றைக்குப் பள்ளிக்கல்வித்

துறைக்கான விதைநெல்லைப் (இன்றைய பள்ளி ஆசிரியர்கள்) பெற்றுக் கொண்டிருக்கிறோம்.

பொறியியல், மருத்துவம், சட்டம் போன்ற படிப்புகளைவிடக் கலை, அறிவியல் படிப்புகளில் இன்றைக்கு அதிகமான மாணவர்கள் சேர்ந்து, குடிமைத்தேர்வு, அரசுப் பணியாளர் தேர்வாணையத் தேர்வுகள் மீது ஆர்வம் காட்டுவதைப் பார்க்க முடிகிறது. ஆண்டுதோறும் புதிய புதிய அரசுக் கல்லூரிகள் திறக்கப்படுகின்றன. பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் (University College) தகுதி உயர்த்தப்பட்டு இணைப்புக் கல்லூரிகளாக (Affiliated colleges) மாற்றப்படுகின்றன. கல்லூரி மாணவர் சேர்க்கை எண்ணிக்கையும் சமூகத்தில் ஏற்படும் விழிப்புணர்வு காரணமாகக் கூடிக்கொண்டே போகிறது.

அதே நேரத்தில் பேராசிரியர்களின் பற்றாக்குறையும், அரசின் நிதிச்சுமையைக் காரணம் காட்டிக் கூடிக்கொண்டே போவதைக் கவனிக்க வேண்டும். ஏறக்குறைய கடந்த பத்தாண்டுகளில் எந்த நிரந்தரப் பணியிடமும் நிரப்பப்படவில்லை. தற்காலிகமாகக் கௌரவ விரிவுரையாளர்களை நியமித்து ஈடுகட்ட நினைத்தாலும், அது போதுமானதாக இல்லை.

ஒரு கல்லூரியில் பணியாற்றும் குறைந்தபட்சக் கல்வித்தகுதியைக் கொண்ட அலுவலக உதவியாளரின் ஊதியத்தைவிட, அதே கல்லூரியில் உச்சபட்சக் கல்வித்தகுதியுடன் பணியாற்றும் கௌரவ விரிவுரையாளருக்கு ஊதியம் குறைவு. சம வேலை – சம ஊதியம் என்பது இங்கு மிகப்பெரிய கேள்விக்குறியாக உள்ளது. பல்கலைக்கழக மானியக் குழு பரிந்துரைந்துள்ள ஊதியத்தில் (50,000) பாதி ஊதியமே (25,000) தற்போது கௌரவ விரிவுரையாளர்களுக்கு வழங்கப்படுகிறது. தனியார் கல்லூரிகளின் நிலை இன்னும் கவலைக்குரியதாக உள்ளது.




பள்ளிக்கல்வியானது ஏறக்குறைய முழுவதுமே மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ளதால், அதில் இந்த அளவிற்கு முன்னேற்றம் அடைவதைப் பார்க்க முடிகிறது. ஆனால் உயர்கல்வியானது ஒன்றிய அரசின் ஒத்திசைவுப் பட்டியலில் உள்ளதால் அதிலுள்ள சிக்கலையும் நாம் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனாலும் பேராசிரியர் பணி நியமனம் என்பது மாநில அரசின் முன்னெடுப்பால் சாத்தியமாகக் கூடியதே.

இதற்குத் தடையாக நிதிச்சுமை இருப்பதாக, காரணம் சொல்லப்படுகிறது. இந்தச் சூழலில், ஆண்டுதோறும் ஒன்றிய அரசிடமிருந்து மாநில அரசுகளுக்கு வழங்கப்படும் PM – USHA திட்ட நிதியும், 'இனிமேல் ஒன்றிய அரசின் புதிய கல்விக்கொள்கையைப் பின்பற்றும் மாநிலங்களுக்கே கொடுக்கப்படும்' என்ற அறிவிப்பு, உயர்கல்வியில் கூடுதல் சிக்கலை ஏற்படுத்தலாம்.

ஏற்கனவே, 'உயர்கல்வி முடித்து வெளியே வரும் மாணவர்கள் வேலைக்கேற்ற திறனின்றி வருகிறார்கள்' என்ற குற்றச்சாட்டு எழுந்து, அதற்காகச் சந்தைத் தேவையை நோக்கியத் திறன்மேம்பாட்டு நிறுவனங்களும் உயர்கல்வியைச் சரிவுப் பாதையில் கொண்டு செல்கின்றன. இப்படிச் சவாலான நிலையில் பேராசிரியர்கள் பற்றாக்குறையும் இருப்பது, அடுத்த பத்தாண்டுகளில் உயர்கல்வியை நிறைவுசெய்யும் மாணவர்களின் திறன் குறைபாடாக வெளிப்படலாம். இன்றைக்கு உயர்கல்வி பயிலும் மாணவர்கள், அடுத்த பத்தாண்டுகளில் பள்ளிகளில் ஆசிரியர்களாகப் பயிற்றுவிக்கத் தேவைப்படும்போது இதன் பாதிப்பு பள்ளிக் கல்வியிலும் உணரப்படலாம்.

பள்ளிக்கல்வியில் மாணவர்களின் திறனுக்கு, அவர்களின் வளர்ச்சிக்கு ஆசிரியர்கள் வழியாகக் கொடுக்கும் முக்கியத்துவத்தைப் போலவே, பேராசிரியர்கள் வழியாக உயர்கல்விக்கும் கட்டாயம் கொடுத்தாக வேண்டிய தேவை உள்ளது. மாநில அரசு 4,000 பேராசிரியர் காலிப் பணியிடங்களை நிரப்ப 2019–ல் அறிவிப்பு வெளியிட்டது. 'அந்த அறிவிப்பு செயல்படுத்தப்படும்' என்று 2021–ல் மீண்டும் அறிவிப்பு வெளியிட்டது. இது செயல்பாட்டுக்கு வர வேண்டும். இந்த ஆண்டின் தொடக்கத்தில் 1,800 கௌரவ விரிவுரையாளர்கள் நியமித்ததும் தற்காலிகத் தீர்வே ஆகும். இந்த உத்தியைத் தொடர்ந்து செயல்படுத்த நினைத்தால், பள்ளிக் கல்வியிலும் நாளை கௌரவ ஆசிரியர்கள் வரலாம். அது, மாணவர் சேர்க்கையைத் தனியார் பள்ளி நோக்கி விரைவுபடுத்தவே உதவும். இது 'திராவிட மாடல்' என்கிற நவீன நலன்சார் அரசு (Modern welfare State) வடிவம் சார்ந்த பிரச்னை மட்டுமன்று. 'கல்வியிற் சிறந்த தமிழ்நாடு' என்கிற உலகோர் பார்வையை மாற்றக்கூடியது.

விதைநெல்வகைகளைச்சேகரித்துக்காப்பாற்றுகிற இயற்கை வேளாண்மை ஆர்வலர்களை ஊக்குவிக்கிற அரசு, கல்வியின் 'விதைநெல்லை' காக்காமல் இருப்பது தொலைநோக்குடைய பார்வையாக அறிவுலகினரால் (Intelligentsia) பார்க்கப்படாது. ●

# வாழ்வின் கசப்பான உண்மைகள் 10



1. சூரியன் உதிப்பதையோ, காற்று வீசுவதையோ, மழை பெய்வதையோ உங்களால் கட்டுப்படுத்த முடியாது. இயற்கையின் நியதி இது. இதைப்போலவே, மற்ற மனிதர்களையும் உங்களால் கட்டுப்படுத்த இயலாது. 'இதைச் செய்', 'இதைச் செய்யாதே' என்று குடும்பத்தினரையும் நண்பர்களையும் நீங்கள் சொல்லும்போது, உங்கள் வார்த்தைக்குக் கட்டுப்பட்டது போல அவர்களில் சிலர் நடிக்கலாம். மனப்பூர்வமாகச் செய்ய மாட்டார்கள். 'இதைச் செய்தால் இப்படி ஆகும்' என்று விளைவுகளை மட்டும் சொல்லுங்கள். செயல்களை அவர்களின் போக்கில் விட்டுவிடுங்கள்.

2. ஒரு செயல் நமக்குத் தவறாகத் தெரியலாம். ஆனால், அதைச் செய்பவர் 'இதுதான் சரி' என்று நினைக்கலாம். எல்லோரையும் மாற்றுவதற்கு நம்மால் முடியாது. கண்ணில் படும் எல்லாத் தவறுகளையும் திருத்தும் பணி உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. மற்றவர்களின் தவறுகளைப் பார்த்துப் புலம்புவதையும், அவர்களைத் திருத்துவதையும் நிறுத்துங்கள். அப்போதுதான் நீங்கள் செய்யும் செயல்களில் எது சரி, எது தவறு என்று உங்களுக்குத் தெரிய ஆரம்பிக்கும். உங்களைத் திருத்துவதில் நேரத்தைச் செலவிட ஆரம்பிப்பீர்கள்.

3. அடுத்தவர்களைப் பார்த்துப் பொறாமைப்படுவது, அறியாமையால் நிகழும் தவறு. அடுத்தவர்களைப் போல மாற நினைப்பது, நம் தனித்தன்மையை அவமானப்படுத்தும் செயல். இந்த இரண்டையும் எப்போதும் செய்யக்கூடாது. 'அவரைவிட நான் அதிகம் சம்பாதிக்க வேண்டும்' என்று ஒப்பீடுகள் செய்வது தவறு. இந்த முயற்சியில் நீங்கள் ஜெயிக்கலாம். ஆனால், அப்போதும் உங்களைவிட அதிகமாக இன்னொருவர் சம்பாதித்துக்கொண்டிருப்பார். அந்த ஆசைக்கு எல்லையே கிடையாது. முடிவுக்கோடு தெரியாத ஓட்டப்பந்தயம் போல அது ஆகிவிடும். இந்த உலகின் முதல் பணக்காரர் பட்டியலே அடிக்கடி மாறிக்கொண்டிருக்கிறது. உங்களின் தனித்தன்மையை உணர்ந்து, மகிழ்ச்சியாக வாழுங்கள்.

4. நீங்கள் எவ்வளவு பெரிய திறமைசாலியாக இருந்தாலும், சில சமயங்களில் தோல்விகளைத் தவிர்க்க முடியாது. எல்லா நேரங்களிலும், எல்லா முயற்சிகளிலும் ஜெயித்தவர்கள் என்று யாரும் கிடையாது. ஆயிரக்கணக்கான சோதனைகளைத் துல்லியமாகச் செய்து, மாதக்கணக்கில் உழைத்து உருவாக்கப்படுகிற ராக்கெட்கூடச் சில சமயங்களில் விண்வெளியைத் தொடமுடியாமல் கடலில் எரிந்து விழுகிறது. இதுதான் இயல்பு. வாழ்க்கை என்பதே வெற்றிகள் மற்றும் தோல்விகள் தரும் அனுபவங்களின் தொகுப்புதான். ஒருமுறை தோற்றதாலேயே நீங்கள் தோல்வியாளர் என்று கிடையாது. அந்த அனுபவத்தை வைத்து உங்களால் ஜெயிக்க முடியும்.

5. உங்களைத் தெரிந்துகொண்ட மனிதர்களில் பலர் உங்களை நேசிப்பார்கள், சிலர் உங்களை வெறுக்கவும் செய்யலாம். எல்லோருக்கும் பிடித்தமானவராக யாராலும் இருக்க முடியாது, கடவுளுக்குக்கூட வாய்க்காத வரம் அது. உங்களை அறிந்த அத்தனை பேருக்கும் பிடித்தமான மனிதராக நீங்கள் மாற ஆசைப்பட்டால், உங்கள் வாழ்க்கை நரகமாகிவிடும். எல்லோருக்காகவும் நடித்து நடித்து, உங்களின் இயல்பான வாழ்க்கையை வாழமுடியாமலே போய்விடும். சிலர் உங்களை வெறுத்தால், வெறுத்துவிட்டுப் போகட்டும்; அதில் தவறில்லை. சிலருக்கு உங்களைப் பிடிக்கவில்லை என்பதாலேயே நீங்கள் வெறுக்கத்தக்க மனிதர் என்று அர்த்தமில்லை.



6. மற்றவர்கள் உங்களுக்கு அக்கறையுடன் ஆலோசனைகள் தரலாம், அன்புடன் உதவிகள் செய்யலாம். ஆனால், முடிவுகளை நீங்கள்தான் எடுக்க வேண்டும். உங்கள் வாழ்க்கை என்ற கப்பலின் கேப்டன் நீங்கள்தான். வெளியிலிருந்து உங்கள் வாழ்க்கையைப் பார்க்கும் மற்றவர்களுக்குப் பல யோசனைகள் தோன்றலாம். ஆனால், உங்களுக்குப் பொருத்தமான முடிவு எது என்பதை நீங்கள் மட்டுமே அறிவீர்கள். சில பிரச்னைகளின்போது கடினமான முடிவுகள் எடுக்க வேண்டியிருக்கலாம். சில நெருக்கடிகளில் பலவற்றை இழக்க வேண்டிய சூழல் வரலாம். எதையும் துணிந்து செய்து முன்னேறுங்கள்.

7. பல சந்தர்ப்பங்களில் நம்மைப் பற்றிய மிக மோசமான, இரக்கமற்ற விமர்சகராக நாம் மாறிப் போகிறோம். ஏதோ ஒன்றைச் செய்யும்போது, நாம் எதிர்பார்த்தது போல அது நடந்திருக்காது. உடனே, ‘அடுத்தவர்கள் இதைப் பற்றி என்ன சொல்வார்களோ?’ என்று கவலைப்படுவோம். எல்லோரும் நம்மைப் பற்றியே நினைப்பதாகவும், நம்மைக் கேலி செய்வதாகவும் ஒரு கற்பனைச் சித்திரத்தை நாமே உருவாக்கிக்கொள்கிறோம். இன்றைய அவசர உலகில் யாருக்கும் அதற்கான நேரமில்லை என்பதே யதார்த்தம். உங்களின் செயல்களைக் கவனிக்கும் நெருக்கமான மனிதர்களும், உங்கள் மீது இருக்கும் அக்கறையில்தான் கவனிப்பார்கள். உங்களை விமர்சனம் செய்யவோ, காயப்படுத்தவோ அவர்கள் அதைக் கவனிப்பதில்லை. அப்படியே சிலர் கேலி செய்தாலும், அதன்பின்னால் இருப்பது அக்கறை கிடையாது; பொறாமை உணர்வு மட்டுமே! அதைப் பொருட்படுத்தாதீர்கள்.

8. எதிர்காலத்தைத் திட்டமிட்டு வாழ்வது சிறப்பு. ஆனால், அந்தத் திட்டமிடலுக்குள் எதிர்காலம் குறித்த பயங்கள் வந்துவிடக்கூடாது. ‘இது இப்படி நடக்காவிட்டால்’, ‘அதில் நான் தோற்றுவிட்டால்’ என்றெல்லாம் யோசிப்பது திட்டமிடல் கிடையாது. அதற்குப் பதிலாக, இந்தக் கணத்தில் வாழலாம். ஒவ்வொரு நாளிலும் அந்த நாளுக்கான வாழ்வை மட்டுமே அனுபவித்து வாழலாம். கடந்த காலத்தில் இழந்த வாய்ப்புகளை நினைத்து வருத்தப்படாமல், எதிர்காலம் குறித்த எதிர்பார்ப்புகளில் பதற்றம் அடையாமல், இன்றைய நாளில் வாழலாம். சின்னச்சின்ன வெற்றிகளில் மகிழலாம், எதிர்பாராத தோல்விகளில் பாடம் கற்கலாம்.

9. இழப்புகளைச் சந்திக்காத மனிதர்கள் கிடையாது. பொருட்களை மட்டுமின்றி, மனிதர்களையும் வாழ்வில் இழக்க வேண்டியிருக்கும். யோசித்துப் பார்த்தால், பள்ளிப் பருவத்தில், கல்லூரிப் பருவத்தில், வேலைக்குச் சென்ற பிறகு, அலுவலகம் மாறிய பிறகு என்று ஒவ்வொரு கட்டத்திலும் நம்மைச் சுற்றியிருக்கும் மனிதர்கள் மாறிக்கொண்டே இருப்பார்கள். அவர்களில் ஒருசிலர் மட்டுமே எப்போதும் உடன் வருவார்கள். உங்கள் வளர்ச்சியில் அக்கறை காட்டுகிற மனிதர்களை இழக்காதீர்கள். எதிர்மறையான சூழலையே ஏற்படுத்துகிற மனிதர்களை அருகில் சேர்க்காதீர்கள்.

10. நாம் எதிர்பாராத விஷயங்கள் மற்றும் சம்பவங்கள் பலவற்றின் தொகுப்பே நம் வாழ்க்கை. எதிர்பாராமல் நல்லது நடந்தால் மகிழ்வோம். மோசமாக ஏதாவது நடந்தால், உடனே அதற்கு அடுத்தவர் மீது பழியைப் போடுவோம். ஆனால், நம் வாழ்வில் நடக்கும் எல்லாவற்றுக்கும் நாமே பொறுப்பு. நாம் எடுக்கும் முடிவுகளே, நம் வாழ்வில் நடக்கும் செயல்களுக்குக் காரணம். நம் முன்னே இருக்கும் வாய்ப்புகளில் சரியான ஒன்றைத் தேர்வு செய்வோம். அதன் விளைவுகளுக்கும் பொறுப்பேற்போம். ●



# வேலையில் உயர 10 டெக்னிக்குகள்!




படிப்பை முடித்து தனக்கு ஏற்ற நல்ல வேலையில் சேர வேண்டும் என்பது 99% இளைஞர்களின் பெருங்கனவு. வேலைக்குச் சென்று கொண்டிருக்கும் பலருக்கோ, 'நான் நினைத்த எதுவும் கிடைக்கவில்லை. கிடைத்த வேலைக்குச் செல்கிறேன்' என்ற சலிப்பு. இந்த மனநிலை உள்ளவர்களால் சிறு பதவி உயர்வைக்கூட எட்ட முடியாது. வேலை பார்க்கும் நிறுவனத்துக்கே இவர்கள் சுமையாகிப் போவார்கள். நீங்கள் பார்ப்பது பிடித்த வேலையாகவும் இருக்கலாம்; எதிர்பார்க்காத வேலையாகவும் இருக்கலாம். அந்த வேலையில் சிறப்பாகச் செயல்பட்டு உங்களுக்குப் பிடித்தமான இடத்தை அடைய தகுதிப்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்புகள் குறித்து விளக்கம் அளிக்கிறார் ரீச் அகாடமியின் நிறுவனர் மற்றும் கல்வியாளர் நஞ்சுண்டேஸ்வரன்.



படிக்கும் காலத்தில் புத்தகங்களில் கற்றுக்கொண்டதைவிட வேலைக்குச் செல்லும்போது வேலையிடத்திலும், சமூகத்திலும் அனுபவத்தில் கற்றுக்கொள்ளும் பாடம் அதிகம். புதிதாக ஒரு வேலைக்குச் செல்லும்போது, அங்குள்ள ஒவ்வொருவர் மனதிலும் நீங்கள் ஏற்படுத்தும் முதல் தாக்கம் முக்கியம். அங்கிருப்பவர்களைப் புரிந்துகொள்வதுடன், சின்னச் சின்ன விஷயங்களில் கூட நீங்கள் எந்தளவுக்கு பெஸ்ட் என்பதை உணரச் செய்வது அவசியம். இதற்கான 10 டெக்னிக்குகள்:

**1. உற்சாகமாக இருங்கள்:**

புதிதாக வேலைக்குச் செல்பவர்களுக்கு அந்த நிறுவனத்தில் முதல் ஒரு மாதம், அங்கிருக்கும் வேலைச் சூழலைக் கற்றுக்கொள்வதற்கான காலம். எல்லா விஷயமும் ஒரே நாளில் புரிந்து விடுவதில்லை. மெல்லப் புரியும் என்ற நம்பிக்கையுடன் அணுகலாம். நிறுவனங்கள் உங்களிடம் உற்சாகமான மனநிலையை எதிர்பார்க்கும். இரவில் நன்கு தூங்கி, காலையில் உற்சாகமாக எழுந்து சுறுசுறுப்பாகப் போக வேண்டும். தூங்கி வழியும் முகத்துடன், சோர்வாக இருப்பது, உங்களைப் பற்றி மோசமான எண்ணத்தை உருவாக்கும்.

**2. நேர்த்தியாக உடுத்துங்கள்:**

நீங்கள் பார்க்கும் வேலைக்கு ஏற்றபடி, அலுவலக விதிகளை மீறாத தோற்றத்தில் இருக்க வேண்டியது அவசியம். உடலின் பாகங்கள் அதிகப்படியாக வெளியில் தெரியும்படியான உடை, கிழிந்த உடை, கறை படிந்தது, சுருங்கியது மற்றும் வண்ணம் போனது என்று சரியில்லாத எந்த உடையும் வேலைக்குச் செல்லும்போது அணிய வேண்டாம். உங்களது உடைகள் உங்களைப் பற்றி அதிகம் பேசிவிடுகின்றன.

**3. தாமதமின்றிச் செல்லுங்கள்:**

வேலைக்குத் தாமதமாகச் செல்வது உங்களது வழக்கமாக மாறிவிடக் கூடாது. குறித்த நேரத்துக்கு சற்று முன்னதாக அலுவலகத்தில் இருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள். எதிர்பாராத

ரீச் அகாடமியின் நிறுவனர் மற்றும் இயக்குநர், கல்வியாளர்
**எஸ்.நஞ்சுண்டேஸ்வரன்**

சம்பவங்களால் தாமதம் ஆகாமல் தடுக்க இந்தப் பழக்கம் உங்களுக்கு உதவும். தவிர்க்க முடியாத காரணத்தால் தாமதம் என்றால், முன்கூட்டியே அலுவலகப் பொறுப்பாளருக்குத் தெரிவிக்க வேண்டும். நேரத்தைச் சரியாகப் பின்பற்றுவதே, நீங்கள் நம்பகமானவர் மற்றும் பொறுப்புள்ளவர் என்பதை வெளிப்படுத்தும்.

**4. கண்களைப் பார்த்துப் பேசுங்கள்:**

அலுவலகத்தில் சக ஊழியர்களைச் சந்திக்கும்போதும், அவர்களுடன் பேசும்போதும் புன்னகைத்தபடி அவர்களது கண்களைப் பார்த்துப் பேசுங்கள். இது அவர்களுக்கும் உங்களுக்குமான நட்புப் பாலத்தை உருவாக்கும். உங்களுடன் நேர்மறையான அணுகுமுறையை அவர்கள் தொடர வாய்ப்புள்ளது. இதனால் அலுவலகத்தில் நீங்கள் பாசிட்டிவான நபர் என்ற அடையாளத்தைப் பெறலாம்.

**5. நெருக்கமாவது முக்கியம்:**

புதிதாக வேலையில் சேர்ந்திருந்தாலும், தான் புதிய நபர் என்ற எண்ணமே நமக்கு அச்சுறுத்தலை உண்டாக்கும். உங்களது மேலாளர் உங்களை அறிமுகப்படுத்தும் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளலாம். அப்படி அறிமுகப்படுத்தாவிட்டாலும் நீங்களாகவே எல்லோருடனும் அறிமுகம் செய்துகொள்ளலாம். உங்களைப் பற்றிய சுவாரஸ்யமான விஷயங்களைப் பகிர்ந்துகொள்ளுங்கள். அவர்களுடன் இணைந்து பணிபுரிய ஆவலாக இருப்பதாகச் சொல்லுங்கள். பார்க்கும்போது ஒரு ஹலோ சொல்வது, இணைந்து மதிய உணவு அல்லது தேநீர் சாப்பிடுவது என விரைவில் எல்லோருடனும் நெருக்கமாகிவிடுங்கள்.

**6. முன்முயற்சி எடுங்கள்:**

அலுவலகத்தில் புதிய பொறுப்புகள் அளிக்கப்படும்போது உற்சாகமாக ஏற்றுக்கொள்ளுங்கள். உங்களது சக பணியாளர்களுக்கு உதவி தேவைப்படும்போது நீங்களாக முன்வந்து செய்யுங்கள். அவர்களாக உதவி கேட்கும்போது உடனடியாகச் செய்து கொடுங்கள். நீங்கள் உங்களது குழுவில் எல்லாருக்கும் பிடித்தமானவராக மாறலாம். உங்களது எதிர்காலத்துக்கு உதவ அவர்கள் தயாராக இருப்பார்கள்.



**7. கேள்வி கேளுங்கள்:**

நீங்கள் இணைந்திருக்கும் புதிய வேலை பற்றித் தெரிந்துகொள்ள நிறைய கேள்விகளைக் கேட்கத் தயங்காதீர்கள். பயிற்சிக்குப் பிறகும் வேலை செய்யும்போது ஏற்படும் சந்தேகங்கள் தீர வேண்டும். இதற்காகக் கேள்விகள் கேட்கலாம். அவ்வாறு கேட்டுத் தெரிந்துகொள்ளும்போது, நீங்கள் உங்களது வேலையை நேர்த்தியாகச் செய்ய விரும்புகிறீர்கள் என்று அவர்கள் புரிந்துகொள்வார்கள்.

**8. கேட்பவற்றைக் குறிப்பெடுங்கள்:**

புதிய வேலையில் நீங்கள் ஒவ்வொன்றாகக் கற்றுக் கொள்ளும்பொழுது அவற்றைக் கண்டிப்பாகக் குறிப்பு நோட்டில் எழுதிக்கொள்ளலாம். தகவல்களை மறந்துவிடாமல் தேவைப்படும்போது பயன்படுத்த உதவும். மேலும் முழுதாகக் கற்றுக்கொள்ளும் வரை கவனமாகக் குறிப்பெடுத்துக் கொள்வது, உங்களை மேம்படுத்தும்.

**9. அலைபேசியைத் தவிர்த்திடுங்கள்:**

இன்றைய தலைமுறையினர் 24 மணி நேரமும் செல்போனிலேயே இருப்பதை விரும்புகின்றனர். வேலைக்கு இடையிலும் இன்ஸ்டா ரீல்ஸ் பார்ப்பது, சோஷியல் மீடியாக்களில் நேரம் செலவிடுவது என்று இருக்கிறார்கள். இது வேலையைப் பாதிக்கும். மேலும் அலுவலக மேலாளர்கள் யாரும் இதனை விரும்புவதில்லை. இது கவனச்சிதறலை உண்டாக்கி வேலையே பார்க்காதது போன்ற உணர்வை உண்டாக்கும். இதனால் வேலையிடத்தில் அடிக்கடி பர்சனல் அழைப்புகளுக்குப் பதிலளிப்பதைத் தவிர்க்கலாம். உணவு இடைவேளையில் பர்சனல் அழைப்புகள் மற்றும் இன்ஸ்டா ரீல்ஸ் பார்க்க நேரம் ஒதுக்கலாம்.

**10. எல்லைகள் அறியுங்கள்:**

சக பணியாளருடன் நட்பில் இருக்கும்போது சிலர் தொழில்முறை தகவல்களை மட்டும் பகிர்ந்துகொள்வார்கள். ஒருசிலர் தங்கள் குடும்ப விஷயங்கள் மற்றும் தங்கள் பிரச்னைகளைப் பகிர்ந்துகொள்வார்கள். உங்களது பர்சனல் விஷயங்களில் எதைப் பகிரலாம், எதைத் தவிர்க்கலாம் என்பதில் எல்லை அறிந்து தெளிவாக இருங்கள்.

**– யாழ் ஸ்ரீதேவி**



# தீர்வு தேடுகிறோமா...

# குற்றம் சொல்கிறோமா?

ஒரு பிரச்னை வரும்போது அதைத் தீர்க்க அல்லது விவாதிக்க ஒன்றுக்கும் மேற்பட்டோர் முயல்வார்கள். அந்த விவாதத்தன்மையே ஒரு பிரச்னையாகிவிடும். அவர்களிடையே தனிப்பட்ட மோதல்கள் இருந்தால், அந்த விவாதம் நேர்மையாக இருக்காது.

வீட்டில் கணவன், மனைவி இருவரும் மாற்றி வீட்டு வேலைகளைச் செய்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அவர்களுக்குள் மகா ஒற்றுமை நிலவுகிறது. அப்போது ஒருவர் கழுவும் பாத்திரங்களை மற்றவர்கள் சோதிப்பதில்லை. அப்படியே பார்த்தாலும், அதில் ஒன்றிரண்டு சரியாகக் கழுவவில்லை என்றாலும் அமைதியாக விட்டுவிடுவார்கள். ஒருவேளை இருவருக்கும் பனிப்போர் வந்து அப்போது ஒருவர் கழுவிய தட்டில் கொஞ்சம் அழுக்கு இருந்தாலோ, அல்லது க்ளீனிங் பவுடர் ஒட்டியிருந்தாலோ, உடனே அடுத்தவர் குறைசொல்ல ஆரம்பித்து விடுவார்.

அவரின் நோக்கம், பாத்திரங்கள் சுத்தமாக இருக்க வேண்டும் என்ற அக்கறையா? அல்லது, நம்முடன் மோதலில் இருக்கும் இவரை இதை வைத்து எப்படியெல்லாம் மட்டம் தட்டலாம் என்ற நினைப்பா?

அனுராக் கஷ்யபின் 'Ugly' திரைப்படம் இப்படி ஒரு மதிமயக்கத்தைப் பற்றிப் பேசுகிறது.

கல்லூரியில் படிக்கும்போது ராகுலும் ஷாலினியும் காதலிக்கிறார்கள். இந்தக் காதல் தெரியாமல், சவுமிக் வந்து ஷாலினியிடம் காதலைச் சொல்ல, அவள் மறுக்கிறாள். கல்லூரி முடிந்து ராகுலும் ஷாலினியும் திருமணம் செய்துகொள்கிறார்கள். ராகுல் ஒரு நடிகனாகிவிட வேண்டும் என்று உழைக்கிறான். ஷாலினி பணக்கார வீட்டுப் பெண்ணாக இருந்தாலும், ராகுலைத் திருமணம் செய்து அவளுக்குத் துணையாக இருக்கிறாள். அவளுக்கு மாடலிங் செய்ய வேண்டும் என்ற ஆசையும், ஆனால் தான் அழகாயில்லை என்ற தாழ்வு மனப்பான்மையும் அதிகமாக இருக்கிறது.

ராகுலுக்கும் ஷாலினிக்கும் பத்து வயதில் ஒரு மகள் இருக்கிறாள். வாழ்க்கையின் போக்கில் ஏற்படும் மாற்றங்களால் அவர்கள் அடிக்கடி சண்டை போடுகிறார்கள். ஷாலினியை ராகுல் துன்புறுத்துகிறான். அவள் விவாகரத்து கோரும் மனநிலைக்கு வருகிறாள்.

இந்நிலையில் முன்பு காதலைச் சொல்லித் திரும்பிப் போன சவுமிக் ஒரு போலீஸ் அதிகாரியாக மிகப்பெரிய அதிகாரமிக்கவனாக வந்து ஷாலினியைச் சந்திக்கிறான். ''நீ விவாகரத்து வாங்கினால், உன்னைத் திருமணம் செய்துகொள்கிறேன்'' என்கிறான். ஷாலினி அதை ஏற்கிறாள்.

விவாகரத்துக் கிடைக்கிறது. ஆனாலும், மாதம் ஒருநாள் தன் பத்து வயது மகளை அழைத்துச் சென்று ஒருநாள் நேரம் செலவழிக்கும் உரிமையை ராகுல் பெறுகிறான். இப்படி ஒருநாள் ராகுல் தன் பத்து வயது மகளை அழைத்துப் போகையில், தன் இயக்குநர் நண்பன் வீட்டுக்குப் போகும் வேலை வருகிறது. குழந்தையை காரிலேயே இருக்கச் சொல்லிவிட்டு இயக்குநர் நண்பன் சைதன்யா வீட்டுக்குச் செல்கிறான் ராகுல்.

திரும்பி வரும்போது காரில் குழந்தை இல்லை. இருவரும் பதறிப்போய்த் தேடுகிறார்கள். அப்போது ஒரு பொம்மை விற்பவனிடம் விசாரிக்கிறார்கள். இவர்கள் விசாரிக்கும்போதே, பொம்மை விற்பவன் இவர்களைத் தள்ளிவிட்டு ஓடுகிறான். இவர்கள் துரத்தும்போது அவன் வாகனத்தில் அடிபட்டு இறந்துவிடுகிறான்.

'அந்தப் பொம்மை விற்பவனுக்கும் குழந்தை காணாமல் போனதற்கும் சம்பந்தம் இருக்கிறது' என்பதைச் சொல்வதற்காக ராகுலும் சைதன்யாவும் காவல் நிலையம் வருகிறார்கள். ஆனால் காவல்துறையினர் நிதானமாக விசாரணையில்




இறங்குகிறார்கள். பொம்மை விற்பவனின் அத்தை கால் நடக்க முடியாத நிலையில் இருக்கிறார். அவரிடம் வந்து மேலோட்டமாக விசாரிக்கிறார்கள்.

குழந்தையின் அம்மா ஷாலினியைத் திருமணம் செய்திருக்கும் சவுமிக் தன் போலீஸ் அதிகாரம் அனைத்தையும் உபயோகித்து தேடுகிறான். அவனுக்கு முதல் சந்தேகம், தன் மனைவியின் முதல் கணவனான ராகுல் மீதுதான். "நீதான் குழந்தையை மறைத்து வைத்திருக்கிறாய்'' என்று ராகுலைச் சித்ரவதை செய்கிறான். ராகுலோ, சவுமிக் தன் மேலுள்ள பொறாமையால் குழந்தையைக் கொன்றுவிட்டதாகப் பதில் குற்றச்சாட்டு சொல்கிறான்.

இன்னொரு பக்கம் ராகுலின் நண்பன் சைதன்யா, இந்த விஷயத்தைப் பயன்படுத்திக்கொள்கிறான். அநாமதேயக் குரலில் பேசி, குழந்தை தன் வசம் இருப்பதாக நாடகமாடி காசு பிடுங்க முயல்கிறான். குழந்தையின் அம்மாவான ஷாலினியின் உடன் பிறந்த அண்ணன் போன் போட்டு வேறு குரலில் பேசி, தன்னிடம் குழந்தை இருப்பதாகப் பொய் சொல்லி 50 லட்சம் ரூபாய் கேட்கிறான். ஷாலினி இதைத் தன் அப்பாவிடம், ''கடத்தல்காரன் 65 லட்சம் கேட்கிறான்" என்று சொல்லிப் பணம் வாங்கி, கடத்தல்காரனுக்கு 50 லட்சம் கொடுத்துவிட்டு, அவள் 15 லட்சம் வைத்துக்கொள்கிறாள். கடைசிவரைக்கும் குழந்தையை யாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஒரே ஒரு பெண் போலீஸ் அதிகாரி மறுபடியும் பொம்மை விற்பவனின் அத்தை பற்றி விசாரிக்கிறார். பழைய ரெக்கார்டுகளை எடுத்துப் பார்த்து, பொம்மை விற்பவனின் அத்தைப் பல வருடங்களாகக் குழந்தைக் கடத்தலில் ஈடுபட்டு வந்த கிரிமினல் என்று கண்டுபிடிக்கிறார். விசாரணையில், "பொம்மை விற்பவனும் குழந்தையைக் கடத்தும் வேலை செய்பவன்தான். அவன் தான் கடத்தி இருக்க வேண்டும்" என்கிறாள் அத்தை.

"எல்லா இடங்களிலும் பார்த்தாகிவிட்டது" என்று போலீஸார் சொல்ல, அத்தை காலை ஊன்றமுடியாமல் ஊன்றி அவர்களை அழைத்துச் செல்கிறார். பொம்மை விற்பவனின் வீடருகே இருக்கும் ஒரு ஸ்கூட்டரில் ஒரு ஷீட் இருக்கிறது. அதை விலக்கிப் பார்க்கிறாள். அங்கே குழந்தை வாய் கட்டப்பட்டு மூச்சுத் திணறி அழுகிச் சடலமாகக் கிடக்கிறது. அனைவரும் அதைப் பார்த்து திகைத்து நிற்கிறார்கள்.

விபத்தில் உயிரை விட்ட பொம்மை விற்பவனின் அத்தையிடம் முதலிலேயே ஒழுங்காக விசாரித்திருந்தால் குழந்தையை உயிரோடு மீட்டிருக்க முடியும். ஆனால் யாரும் அங்கே பிரச்னையைத் தீர்க்க முயலவில்லை. பிரச்னையை வைத்து யார் மீது குற்றம் சாட்டலாம் என்றே குறியாக இருந்தார்கள். அப்பா, அம்மா, வளர்ப்புத் தந்தை, மாமா, நண்பன் என்று அனைவருமே தங்களுக்குப் பிடிக்காதவர்களைக் குற்றம் சாட்டவும், ஆதாயம் தேடவும் மட்டுமே இந்தக் குழந்தைக் கடத்தலைப் பயன்படுத்திக் கொண்டார்கள். குழந்தையை மீட்க வேண்டுமென்ற உண்மையான அக்கறையை இழந்திருந்தார்கள். அதனாலேயே குழந்தையை இழந்தார்கள்.

சிந்தனையைத் தூண்டிய படம் இது. சமூகத்துக்கோ, ஒரு குழுவுக்கோ அல்லது தனிநபருக்கோ ஒரு பிரச்னை வந்தால் அதைத் தீர்க்க ஆர்வம் கொள்கிறோமா? அல்லது அதைப் பயன்படுத்தி நமக்குப் பிடிக்காதவர்களைக் குற்றம் சொல்ல ஆரம்பிக்கிறோமா? இதுதான் ஒவ்வொருவரும் தனக்குள் கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி.

**– விஜயபாஸ்கர் விஜய்**





# ஆ...
# என் இடுப்பு!

பரபரப்பாக வேலை செய்யும்போது திடீரென சிலர், வலி தாங்க முடியாமல் இடுப்பைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்துவிடுவார்கள். குறிப்பாக வயதாகும்போது இது அதிகம் ஏற்படும்.

இடுப்புவலி ஏற்படுவதற்கு ஏராளமான காரணங்கள் இருக்கலாம். வாகனங்கள் மேடு பள்ளங்களில் ஏறி இறங்கும்போது ஏற்படும் அதிர்வுகளைத் தாங்குவதற்காக ஷாக் அப்ஸார்பர்கள் இருப்பது போல, நம் இடுப்பு மூட்டில் ஒரு குஷன் அடுக்கு இருக்கிறது. நமது வேலைகள், இயக்கங்களின்போது ஏற்படும் அதிர்வுகளை இது தாங்கி, நம் உடலைக் காக்கிறது. வயதாக ஆக... இதன் அடுக்கில் ஏற்படும் பாதிப்புகளால் இது தன் திறனை இழந்து வலியை வெளிப்படுத்துகிறது. இதேபோல இடுப்பு எலும்பில் காயம் ஏற்படுவது, இடுப்பில் தரப்படும் அழுத்தம் ஆகியவையும் வலிக்குக் காரணமாகலாம்.

இடுப்பு வலியை நாம் இடுப்பில் மட்டுமே உணர்வதில்லை. தொடைகள், பின்புறம், தொடை இடுக்கு ஆகிய இடங்களில் உணரப்படும் வலியும் இதன் வெளிப்பாடுதான். இதன் விளைவாக அடிமுதுகிலும் கால் மூட்டுக்களிலும் பாதிப்பு நேரலாம்.



துறுதுறுவென ஓடியாடும் பிள்ளைகளுக்கும், விளையாட்டில் ஆர்வம் காட்டுபவர்களுக்கும், கவனப்பிசகால் இடுப்பு எலும்பில் முறிவு ஏற்படக்கூடும். முதுமையில் எலும்புச்சிதைவு நோய் ஆண்களைவிடப் பெண்களை அதிகம் தாக்குகிறது. இந்த நோயின் பாதிப்புக்கு ஆளானவர்களுக்கு இடுப்பு எலும்பில் அடிக்கடி முறிவு ஏற்பட்டு வலியும் நிரந்தரமாக இருக்கும். மூட்டுவலிப் பிரச்னை இருக்கும் முதியோர்களுக்கு இடுப்பு வலியும் படுத்தி எடுக்கும். உடல் எடை அதிகம் இருக்கும் மூட்டுவலி நோயாளிகள், எடையைக் குறைத்தால் வலியைக் குறைக்கலாம்.

## காரணங்கள் என்னென்ன?

- காயங்களும் எலும்புமுறிவும் ஏற்படுவது
- எலும்பு பிசகி இடம் மாறிவிடுவது
- தசைப்பிடிப்பும் அழுத்தமும் ஏற்படுவது
- எலும்பு இணைப்புகளுக்கு இடையே இருக்கும் நீர் நிறைந்த பகுதியில் வீக்கம் வருவது
- இடுப்பு இணைப்பைச் சூழ்ந்திருக்கும் தசைப்பகுதியில் கிழிசல் வருவது
- எலும்புகளையும் தசைகளையும் இணைக்கும் தசைநாரில் வீக்கம் ஏற்படுவது
- இயல்புக்கு மாறாக நரம்புகள் அழுத்தப்படுவது
- முதுகெலும்பை உடலின் அடிப்பகுதியுடன் இணைக்கும் பகுதியில் வீக்கம் வருவது
- அடிமுதுகிலிருந்து கால்களுக்குச் செல்லும் நரம்புகள் அழுத்தப்படுவது
- முதுகெலும்பைச் சூழ்ந்திருக்கும் பாதுகாப்புப் பகுதி சுருங்குவது
- எலும்புகளில் புற்றுநோய் தாக்குவது
- ரத்தப் புற்றுநோய் ஏற்படுவது
- இடுப்பு இணைப்புக்கு வரும் ரத்தம் குறைவது
- ஆஸ்டியோபோரோசிஸ் எனும் எலும்புச்சிதைவு நோயின் தாக்கம்

## தடுக்கும் வழிகள் என்னென்ன?

- குழந்தைகள் தடுக்கி விழும் அளவுக்கு விளையாடாமல் பார்த்துக்கொள்ளவும்
- முதுமையிலும் தடுக்கி விழும் அளவுக்கு வேகம் வேண்டாம். பாத்ரூம் போன்ற இடங்களில் சொரசொரப்பான தரையும் போதுமான வெளிச்சமும் அவசியம். தண்ணீர் சிந்தியிருக்கும் தரைகளில் கவனமாக நடக்க வேண்டும்
- ஒரு காலை மட்டும் தூக்கியபடி நீண்ட நேரம் எந்த வேலையும் செய்யக்கூடாது. அது இடுப்பு இணைப்பைப் பாதிக்கும்
- இரண்டு கால்களிலும் சமமான அளவில் எடை பரவுமாறு நிற்க வேண்டும்.
- நீண்ட நேரம் நிற்கக்கூடாது. எங்காவது நீண்ட நேரம் நிற்க நேர்ந்தால், மிருதுவான தரையில் நிற்கவும்
- உடற்பயிற்சி மற்றும் நடைப்பயிற்சி செய்வதற்கு முன்பும் பின்பும் முறையாக ரிலாக்ஸ் செய்துகொள்ளவும். சமமாக இருக்கும் தரையிலேயே உடற்பயிற்சி மற்றும் நடைப்பயிற்சி செய்யவும்
- உடற்பயிற்சிகளை முறையான நிபுணர்களின் ஆலோசனை பெற்றே செய்யவும். ஓடுவதற்குப் பதிலாக நீச்சல், சைக்கிள் ஓட்டுவது எனச் செய்தால் மூட்டுவலி குறையும்
- நடக்கவும் ஓடுவதற்கும் பயன்படுத்தும் ஷூக்கள் நல்லநிலையில் உள்ளனவா எனச் சோதிக்கவும்
- எலும்புச்சிதைவு நோய் பாதிப்பு இருந்தால், அதைக் கட்டுக்குள் வைக்கவும். அதற்கு ஏற்றபடி வாழ்க்கைமுறையை மென்மையாக மாற்றிக்கொள்ளவும்
- தூங்கும்போது ஒருக்களித்துப் படுக்கவும். இரண்டு கால்களுக்கு இடையில் தலையணை வைத்துக் கொள்ளலாம்

## எப்போது டாக்டரிடம் போக வேண்டும்?

- ஓய்வெடுக்கும்போதும், இரவில் தூங்கும்போதும் இடுப்பு வலித்தால்
- திடீரென வலி எடுத்தால்
- இடுப்பின் இரண்டு பக்கங்களிலும் தாங்க முடியாத வலி ஏற்பட்டால்
- எங்காவது விழுந்ததாலோ, காயம் பட்டதாலோ இடுப்பு வலி ஏற்பட்டால்
- இடுப்பை அசைக்க முடியாத அளவுக்கு வலித்தால்
- கால்களால் ஒரு சின்ன பொருளைக்கூட அசைக்க முடியாதபடி இருந்தால்
- இடுப்பில் வீக்கம் இருந்தால்
- குனிய முடியாதபடி இடுப்பு வலித்தால்
- இடுப்பு வலியோடு ஜுரமும் வந்து, இடுப்புப்பகுதி சிவந்திருந்தால் ●

முகம் நீளமாகவும், தாடைப்பகுதி கூராகவும் இருக்கும் நாய் இனங்கள் நீண்ட காலம் வாழ்கின்றன. சதுர முக நாய்களுக்கு அவற்றுடன் ஒப்பிடும்போது ஆயுள் குறைவு.

பெரிய கிரகமான வியாழன் ஒருமுறை சூரியனைச் சுற்றி வருவதற்கு 11.86 ஆண்டுகள் ஆகின்றன.

உலகில் முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்ட கேமராவில் உங்களை போட்டோ எடுப்பதாக இருந்தால், நீங்கள் எட்டு மணி நேரம் அசையாமல் உட்கார்ந்திருக்க வேண்டும்.

சிலவகை நத்தைகள் தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் வரை தூங்கும் வல்லமை பெற்றவை.

பிலிப்பைன்ஸ் நாட்டு மக்களில் 10% பேர் வெளிநாடுகளில் வசிக்கின்றனர். அதிகம் இருப்பது அமெரிக்காவில். சுமார் 40 லட்சம் பேர் அங்கு உள்ளனர்.

ப்ளூடூத் போன்ற ஹெட்போன்களைப் பயன்படுத்தி பேசிக்கொண்டே வாகனம் ஓட்டுவது, குடித்துவிட்டு வாகனம் ஓட்டுவதற்கு சமமான அளவு ஆபத்தானது.

பெண்
நிறங்களை எ
பார்க்க முடியும்
வேகமாகச்
வாகனங்களை
கவனித்து வி
சொல்ல
பார்வைத்தி
இருக்

நம் சூரியக் குடும்பம் இருக்கும் பால்வீதி மண்டலத்தில் உள்ள நட்சத்திரங்களைவிட, பூமியில் இருக்கும் மரங்களின் எண்ணிக்கை மூன்று மடங்கு அதிகம்.

ரோலர் கோஸ்டரில் ஏறி இறங்கி இப்போது குழந்தைகளும் பெரியவர்களும் சாகச விளையாட்டு விளையாடுகிறார்கள். ஆனால், இது நிலக்கரியை உயரமான இடத்திலிருந்து சமதளப் பகுதிகளுக்கு அனுப்புவதற்காக கண்டுபிடிக்கப்பட்ட ஒன்று!

ஐபோன் பயன்படுத்துவோரில் சுமார் 15% பேர், போன் ஸ்கிரீன் உடைந்த நிலையில்தான் அதைப் பயன்படுத்துகின்றனர்.

ஒரு கூட்டத்தில்
இருக்கும் எல்லா
குதிரைகளும் ஒ
நேரத்தில் தூங்குவதி
மற்ற குதிரைகளி
பாதுகாப்புக்காக ஒ
ஒரு குதிரையாவ
விழித்திருக்கும்.



ஆஸ்திரேலியாவில் மனிதர்களைவிட இரண்டு மடங்கு அதிக அளவில் கங்காருகள் இருக்கின்றன.

சுடோகு, செஸ் ஆகிய இரண்டு விளையாட்டுகளுமே மூளையின் திறனையும் நினைவாற்றலையும் மேம்படுத்தும் என ஆராய்ச்சியில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

கிளிகளில் சுமார் 400 வகைகள் இருக்கின்றன. அவற்றில் Kakapo வகை மட்டும் பறக்க முடியாத இனம்.

மனிதர்களின் உடல் வெப்பநிலைக்கு ஈடான சூடு, ஒரு தேன்கூட்டின் உட்புறத்தில் இருக்கும். தேனீக்கள் சிறகசைத்து இந்த வெப்பநிலையைப் பராமரிக்கின்றன.

TomTato என்ற செடி 2013-ம் ஆண்டு மரபணுமாற்றம் செய்து உருவாக்கப்பட்டது. இதன் வேரில் உருளைக்கிழங்கும், செடியில் தக்காளியும் காய்க்கும்.

களால்
ரிதில் பிரித்துப்
. ஆண்களால்,
செல்லும்
ளையும் கூர்ந்து
விரங்களைச்
முடியும்.
றன் அப்படி
கிறது.




ஆரம்பகால கார்ட்டூன் கேரக்டர்கள் பேசும்விதமாக வடிவமைக்கப்படவில்லை. முதன்முதலில் பேசிய கார்ட்டூன், மிக்கி மவுஸ்.




க்
ரே
ல்லை.
ன்
ஒரே
து
.

ஆப்பிள் விதைகள், செர்ரி விதைகள் போன்றவற்றில் சிறிதளவு சயனைடு இருக்கும். ஆனால், உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் அளவுக்கு இல்லை.

கதிர்வீச்சைக் கட்டுப்படுத்தும் தன்மை சூரியகாந்தி விதைகளுக்கு இருக்கிறது. ஜப்பானில் ஃபுகுஷிமா அணுசக்தி விபத்து நடந்த இடத்தில் இவற்றைப் பயன்படுத்துகின்றனர்.





# விண்வெளி ஆராய்ச்சி வீண் செலவா?

விண்வெளி ஆராய்ச்சிகளுக்காகச் செலவழிப்பது 'வீண் செலவு' என்ற கருத்து நம்மில் பலருக்கு கொஞ்சமேனும் இருக்கும். இந்தச் சிறிதேனும், கொஞ்சமேனும் என்ற வார்த்தை இங்கே முக்கியம். 'நிலாவுக்குப் போவதற்குச் செலவழிப்பது சுத்த வேஸ்ட்' என்ற அளவுக்கு வீரியமாக இல்லை என்றாலும், 'இதுக்கெல்லாம் இவ்வளவு காசு செலவழிக்கனுமா?' என்றொரு எண்ணம் கொஞ்சமேனும் நமக்கு இருக்கலாம்.

LIBS என்றொரு கருவி இருக்கிறது. Laser Induced Breakdown Spectroscopy என்பதன் சுருக்கம் இது. பெயரை வைத்தே இந்தக் கருவி எப்படி வேலை செய்யும் என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

Laser: சாதாரணமாக 50 பேரை நடந்து வரச் சொல்லுங்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக நடந்து வருவார்கள். அதே சமயம் 50 ராணுவ வீரர்களை நடந்து வரச் சொல்லுங்கள். சரியாக ஒரே மாதிரி உடல் அசைவுகளுடன் ராணுவ ஒழுங்கில் நடந்துவருவார்கள். அது மாதிரியான ராணுவ ஒழுங்கு ஒளிக்கற்றைகளைத்தான் Laser என்கிறோம்.


Induced: தூண்டப்பட்ட என்ற அர்த்தம் தரும் சொல். இந்த இடத்தில் 'லேசரால் தூண்டப்பட்ட' என்று வருகிறது.

Breakdown: உடைத்தல் என்று அர்த்தம் தரும் சொல். இந்த இடத்தில் 'லேசரால் தூண்டப்பட்டு உடைக்கப்பட்ட' என்ற அர்த்தத்தில் வருகிறது.

Spectroscopy: Spectrum என்றால் அலைக்கற்றை. அந்த அலைக்கற்றையை வைத்து ஒரு பொருளின் தன்மையை ஆராய்ந்தால் அதுதான் Spectroscopy.

LIBS எப்படி வேலை செய்கிறதென்றால், சோதிக்க வேண்டிய தனிமங்கள் (Elements) மீது ஒரு லேசர் அலைக்கற்றையைப் பாய்ச்சுவார்கள். அது அந்தத் தனிமத்தை உடைக்கும். அப்படி உடைக்கும்போது அதிலிருந்து ஒரு பிளாஸ்மா வெளிப்படும். அந்த பிளாஸ்மாவின் ஒளியை Spectroscope உள்வாங்கி, அது என்ன வகையான தனிமம் என்று நமக்குச் சொல்லிவிடும்.

கைக்கு அடக்கமான கருவி. அதில் ஒரு ஸ்விட்ச் இருக்கும். அதை அழுத்தினால் லேசர் வரும். அந்தக் கருவியை, பெயர் தெரியாத தனிமம் மீது வைத்து ஸ்விட்சை அழுத்தினால், ஸ்க்ரீனில் அது என்ன தனிமம் என்று துல்லியமாகக் காட்டிவிடும். இப்படித்தான் LIBS வேலை செய்யும்.



ஒரு அணுவைஎடுத்துக்கொண்டால், அதன்நடுவே Nucleus இருக்கிறதென்றும், அதை எலெக்ட்ரான்கள் சுற்றுகின்றன என்றும் நமக்குத் தெரியும். ஒவ்வொரு அணுவுக்கும் ஒவ்வொருவிதமாக எலெக்ட்ரான்கள் சுற்றி வரும்.

நீங்கள் நடந்து சென்று கொண்டிருக்கிறீர்கள். தரையில் ஒரு டென்னிஸ் பந்து அளவுக்குக் குழி இருக்கிறது. அந்தக் குழி எவ்வளவு ஆழம் என்பதை எப்படி கண்டுபிடிப்பீர்கள். பத்து லிட்டர் பக்கெட் முழுக்க நீரை நிரப்பிக் கொண்டு வருவீர்கள். அந்தக் குழியில் ஊற்றுவீர்கள். பக்கெட்டில் இரண்டு லிட்டர் தண்ணீர் மீதம் இருக்கும்போது குழி நிறைந்து நீர் வெளியே வருகிறது. அப்படியானால் குழியின் கொள்ளளவு எட்டு லிட்டர் ஆகும்.

LIBS கருவியின் லேசர் கதிர்கள் பட்டு, அணுவில் இருக்கும் எலெக்ட்ரான்கள் அங்கும் இங்கும் ஓடும். உடனே மறுபடி தங்களைத் தங்கள் பாதையில் நிலைநிறுத்தும். இப்படிக் குழம்பித் திரும்ப அதன் இடத்துக்கே எலெக்ட்ரான்கள் வரும்போது கொஞ்சம் சக்தியை வெளிப்படுத்தும். அந்த சக்திதான் ப்ளாஸ்மாவாக, ஒளியாக வெளி வருகிறது. தனிமத்துக்குத் தனிமம் மாறுபடும் எலெக்ட்ரான்கள் அமைப்பு இருப்பதால், அப்படி கலைந்து மறுபடி உருவாகும் எலெக்ட்ரான்கள் வெளிப்படுத்தும் ஒளியும் மாறுபடும். அந்த ஒளியின் தன்மையை ஸ்பெக்ட்ரோமீட்டர் ஆராய்ந்து, 'இது இந்தத் தனிமம்' என்று சொல்லிவிடும்.


யோசித்துப் பாருங்கள்... ஏதோ ஒரு மலையில் ஏறிக் கொண்டிருக்கிறீர்கள். 'இந்தப் பாறையில் எந்தத் தனிமம் அதிகமாய் இருக்கிறது' என்று யோசிக்கிறீர்கள். சட்டென்று LIBS கருவியைப் பையிலிருந்து எடுத்துப் பட்டென்று ஸ்விட்சை அழுத்துகிறீர்கள். ஸ்க்ரீனில், 'இதில் இருப்பது இரும்பு', 'இதில் இருப்பது கால்சியம்' என்று வந்தால் உங்களுக்கு எவ்வளவு வசதியாய் இருக்கும்!

சந்திரயான் 3, இப்படி லிப்ஸ் கருவியைக் கொண்டுபோய் இருக்கிறது. சந்திரனின் தென் துருவப் பகுதி பாறைகளில் லிப்ஸை வைத்து ஆராய்ந்ததில், அங்கு அலுமினியம், சல்பர், கால்சியம், இரும்பு, குரோமியம், டைட்டானியம், மாங்கனீஸ், சிலிக்கான் போன்றவை இருப்பதைக் கண்டுபிடித்திருக்கிறது. நாம் இங்கே இருக்கிறோம். 15 லட்சம் கிலோமீட்டர்கள் தள்ளி இருக்கும் ஒரு பாறையில் என்னென்ன தனிமங்கள் இருக்கின்றன என்பதை இங்கிருந்தே அறிவியலின் துணையால் கண்டுபிடிக்கிறோம்.

600 ஆண்டுகளுக்கு முன்பு ஐரோப்பியர்கள், திரளான அறிவியல் கருத்துகளைப் பிடிமானமாய் வைத்து மதவாதத்திலிருந்து அறிவியல்வாதம் பக்கம் திரும்பினார்கள். உலகெங்கும் உள்ள நாடுகளில் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்தினார்கள். அமெரிக்கா போன்ற உணவு மற்றும் கச்சா எண்ணெய் சரியான பேலன்ஸில் இருக்கும் பெரிய பெரிய நிலப்பரப்புகளைத் தமதாக்கிக் கொண்டார்கள். பல நாட்டு மக்களை அடிமையாக்கினார்கள்.

ஐரோப்பியர்களுக்கு இவ்வளவு தைரியத்தைக் கொடுத்தது எது? அவர்களைத் தவிர மற்ற நாடுகளின் மக்களிடம் இருந்த 'குறைவான அறிவியல் அறிவு'தான். 'இவனுகளுக்கு என்ன தெரியும்? சயின்ஸும் தெரியாது, ஒண்ணும் தெரியாது. இவனுங்களை ஈஸியா ஏமாத்திரலாம்' என்று ஐரோப்பியர்களுக்குக் கிடைத்த அந்த நம்பிக்கைதான் நம்மை அவர்களுக்கு அடிமையாக்கியது. விண்வெளிப் போட்டியில் அதேமாதிரி நாம் அடிமையாகாமல் இருக்க, சந்திரயான் 3 போன்ற அறிவியல் வெற்றிகள் இந்தியாவுக்கு அவசியம் தேவை.

150 ஆண்டுகளுக்கு முன்பு நியூயார்க்கில் இருந்து ஸ்பெயினுக்கு அட்லாண்டிக் சமுத்திரம் வழியே கடலில் பயணம் செய்ய மூன்று மாதங்கள் ஆனது.




இப்போது அது 6 மணி நேரமாகக் குறைந்துவிட்டது.

இதே கதைதான் விண்வெளியிலும் நடக்கப் போகிறது. இப்போது நிலாவுக்குப் போக 40 நாட்கள் ஆகலாம். ஆனால் இன்னும் 150 வருடங்கள் கழித்து அந்த பயண தூரம் வெகுவாகக் குறைந்துவிடும்.

இப்போது நாம் விழிப்பாக இல்லாவிட்டால், அந்த நேரத்தில் மறுபடியும் ஏதாவது ஒரு நாட்டை சார்ந்தே இருக்க வேண்டியதுவரும். பசுமைப் புரட்சி, நீலப்புரட்சி, வெண்மைப் புரட்சி போன்றவை எப்படி நம்மைச் சுயமாக நிற்க வைத்ததோ, அது போல விண்வெளிப் புரட்சியும் நாம் சுயமாக நிற்பதற்கு அவசியமானது. இதற்கெல்லாம் செலவழிப்பது, எதிர்காலத்துக்கான முதலீடு.

**– விஜயபாஸ்கர் விஜய்**



# இவன் முடிக்கும் என்றாய்ந்து...

'பரமசிவன் கழுத்தில் இருந்து பாம்பு கேட்டது, கருடா செளக்கியமா?

யாரும் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் செளக்கியமே... கருடன் சொன்னது, அதில் அர்த்தம் உள்ளது!'

கண்ணதாசன் எழுதிய இந்த வரிகளை எப்போது நினைத்தாலும் ஆச்சர்யம் கண்களில் மின்னும். காரணம், துன்பத்தின் தொடக்கமே இல்லாத ஒன்றை நினைத்து வருந்துதலும், பொருந்தாத ஓரிடத்தில் இருக்க நினைப்பதுமே! இதை எத்தனை எளிமையாகச் சொல்லிவிட்டார் இல்லையா?!

மனிதர்களின் அடிப்படை இயல்புகளில் ஒன்றான பேராசை, பெரும்பாலான மனிதர்களை எப்படி ஆட்டுவிக்கிறது என்பதை நாம் தினம் தினம் பார்க்கிறோம். எப்போதுமே தன்னிடம் இருக்கும் ஒன்றைப் பற்றிய மகிழ்ச்சியைவிட, தன்னிடம் இல்லாத ஒன்றைப் பற்றிய கவலைகள் மனிதர்களிடம் அதிகம்!

அதுவே அவர்களைத் தங்கள் தகுதிக்கு மீறிய இடத்திற்கு ஆசைப்பட வைத்து துன்பத்திலும் தள்ளுகிறது.

யோசித்துப் பார்த்தால் அதற்கு மாற்றாக ஒன்றைச் சிந்தித்தால் அது எல்லோருக்கும் நன்மை பயக்கும். அதாவது, அதே விஷயத்திற்கு நம்மைத் தகுதியுடையவர்களாக ஆக்கிக்கொள்வது! அதற்கான முயற்சியிலும் பயிற்சியிலும் மனஉறுதியோடு, வேறெந்த திசை திரும்பலும் இல்லாமல் ஈடுபட வேண்டும். அந்தப் பதவிக்கு என்ன வேண்டுமோ, அதற்குரிய திறமைகள் மற்றும் நிபுணத்துவங்களைப் பெற வேண்டும். அதில் வரக்கூடும் என்று சொல்லத்தக்க தடைகளையும் பிரச்னைகளையும் அறிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும்.

இந்தப் படிநிலைகளில் கற்றால் நிச்சயமாக ஆசைப்பட்ட பதவியை, இடத்தை, வல்லமையோடு

# கதை உணர்த்தும் நீதி 17

செந்தில் ஜெகன்நாதன்

அடைய முடியும். அதை விடுத்து, நடக்கும்போதே பறக்க ஆசைப்பட்டவர்கள் தொப்பென்றுதான் விழுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

மனிதர்களிடையே இருக்கும் இந்தப் பேராசைக் குணத்தை விலங்குகள் மூலம் விளக்கும் நீதிக்கதைகள் ஏராளம் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்த வகையில் இந்தக் கதை எனக்கு மிகவும் பிடித்தது.

காட்டில் விலங்குகளின் அரசனான சிங்கம் முதுமையால் இறந்துபோயிற்று. ஆகவே அடுத்த அரசனாக யாரைத் தேர்ந்தெடுப்பது என்று எல்லா விலங்குகளும் கூடி யோசித்தன. எந்த முடிவையும் அவற்றால் எடுக்க முடியவில்லை.

மீண்டும் இன்னொரு நாள் ஆலோசனை செய்யக் கூடின. அப்போது குரங்கு தானே அரசனாக விரும்பி, வந்திருந்த எல்லா மிருகங்களையும் தன் சேட்டைகளாலும் தந்திரங்களாலும் சந்தோஷப்படுத்தியது. இதனால் மகிழ்ந்த மற்ற விலங்குகள், 'இந்தக் குரங்கு புத்திசாலியாக இருக்கிறதே' என்று முடிவுசெய்து, குரங்கை அரசன் ஆக்கினர்.

இதைக் கண்டு நரி எரிச்சல் அடைந்தது. குரங்கை எப்படியாவது ஆபத்தில் சிக்க வைத்து, காட்டுக்கு அரசனாகும் தகுதி அதற்கு இல்லை என்பதைப் புரியவைத்துவிட வேண்டும் என்று அது சிந்தனை செய்துகொண்டே நடந்து சென்றது.

காட்டில் ஓரிடத்தில் ஒரு புதர் இருந்தது. அதற்குள் ஒரு இறைச்சித் துண்டு வைக்கப்பட்டிருந்தது. அதை நரி கவனித்தது. அதன் மூளை விரைந்து சிந்தித்தது. உடனே குரங்கிடம் அவசரம் அவசரமாக ஓடிச் சென்று, ''வனவிலங்குகளின் சக்கரவர்த்தியே! தாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன் விலைமதிக்க முடியாத அபூர்வப் பொக்கிஷம் ஒன்று என் கண்களுக்குத் தட்டுப்பட்டது. அது காட்டுராஜாவான தங்களுக்குச் சேர வேண்டிய பொருள் என்பதால், தங்களிடம் சொல்ல ஓடோடி வந்திருக்கிறேன்" என்றது.

உடனே குரங்கு மிடுக்கான தோரணையுடன், "என்ன அது?" என்று கேட்டது.

"தாங்கள் உத்தரவு தந்தால் நான் தங்களுக்கு அதை நேரில் காட்ட கடமைப்பட்டுள்ளேன்" என்று நரி பணிவாகக் கூறியது.

நரியின் இனிமையான பேச்சிலும் பணிவிலும் மயங்கிய குரங்கு, உடனே நரியுடன் கிளம்பிச் சென்றது. வெகுதூரம் நடந்து சென்று அந்தப் புதரைக் காட்டியது நரி. புதருக்குள் இருந்து வீசிய இறைச்சி வாசனையை மோப்பம் பிடித்த குரங்கு, அதை எடுப்பதற்காகக் கை வைத்தது.

அவ்வளவுதான்... இரண்டு பற்கள் திடீரென்று வந்து குரங்கின் கைகளைக் கவ்விப் பிடித்துக் கொண்டன. அது, வேட்டைக்காரர்கள் விலங்குகளைப் பிடிப்பதற்காக வைத்திருந்த பொறி. குரங்கு வலி பொறுக்க முடியாமல் காடே அதிரும்படி கூச்சல் போட்டது. அதன் கண்களில் நீர் திரண்டது. என்ன செய்தாலும், கையை விடுவிக்க முடியவில்லை.

நரியின் ராஜதந்திரத்தை அப்போதுதான் உணர்ந்த அது, "நீ ஒரு வஞ்சகன்" என்று திட்டித் தீர்த்தது. குரங்கின் வார்த்தைகளைக் கேட்டு நரி கோபம் அடையவில்லை. அது சிரித்துக்கொண்டே கேட்டது. "ஏ குரங்கே... சிங்கம் கம்பீரமாக அமர்ந்து ஆட்சி செய்த ஆசனத்தில் நீ அமர ஆசைப்படலாமா? அது அழகா, முறையா, தர்மமா? நீ எல்லாம் ஒரு ராஜா என்றால் மற்றவர்கள் சிரிக்க மாட்டார்களா?" என்று கூறியவாறே அங்கிருந்து நகர்ந்தது.

அப்பொழுதுதான் குரங்கு ஒன்றைப் புரிந்துகொண்டது. 'பதவிமேல் நாம் ஆசைப்படக்கூடாது, பதவி நம்மைத் தேடி வந்தால்தான் நமக்கு மதிப்பு' என்று உணர்ந்தது. எப்படியோ அந்தப் பொறியிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு வெளியில் வந்தது. எல்லா விலங்குகளிடமும் மன்னிப்புக் கேட்டு விட்டு, காட்டு ராஜா பதவியிலிருந்து விலகித் தனது வேலையைப் பார்க்கச் சென்றது.

ஒரு பதவிக்குத் தகுதியில்லாத நபர் அதில் அமரும்போது, அது அவருக்கு மட்டுமின்றி, அவருக்குக் கீழிருக்கும் அத்தனை பேருக்கும்தான் துன்பம் விளைவிக்கிறது அல்லவா! வரலாறு முழுக்க தகுதியற்ற தலைமையால் வீழ்ந்தவை எத்தனை சாம்ராஜ்யங்கள்!

'இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து

அதனை அவன்கண் விடல்'

என்றார் ஐயன் திருவள்ளுவர். எந்த வேலையாக இருந்தாலும் அதைச் சரியான நபரிடம் ஒப்படைப்பதற்கு இந்தக் குறளை மனதில் ஒருமுறை சொல்லிப் பார்த்துக் கொண்டாலே போதும்.

பதவி நம்மைத் தேடி வரும் அளவில் நாம் தகுதியை வளர்த்துக்கொண்டால் எந்தச் சிக்கலும் இல்லை அல்லவா? தகுதியை வளர்த்துக்கொள்ளுங்கள்... நீங்கள் விரும்புவது தானாக வரும்! ●



# விதியாசமாகச் சிந்தித்தால் வெற்றி!

மற்றவர்கள் இந்த உலகத்தைப் பார்க்கும் பார்வை வேறு. வெற்றிகரமான மனிதர்கள் பார்க்கும் பார்வை வேறு. பெரிய திறமைசாலிகளாக இல்லாவிட்டாலும், ஏதோ ஒரு வித்தியாசம் காட்டி அவர்கள் ஜெயிக்கிறார்கள். எவ்வளவு பிரச்னைகள் குறுகிகே நின்றாலும், எத்தனை தடைகள் அணை போட்டாலும், எவ்வளவு எதிர்மறை விமர்சனங்கள் எழுந்தாலும், எல்லாவற்றையும் தாண்டி அவர்களால் வெற்றியின் பாதையை அடைய முடிகிறது.

ஏனெனில் அவர்கள் சில விஷயங்களை உறுதியாக நம்புகிறார்கள். அது அவர்களின் தினசரி வாழ்வில் பிரதிபலிக்கிறது. அந்த வெற்றி மந்திரங்கள் இங்கே:

- முழுமையான உழைப்பையும், போதுமான நேரத்தையும் கொடுக்கத் தயாராக இருந்தால் போதும்... சாத்தியமில்லாத விஷயம் என எதுவும் இல்லை.
- 'இது கஷ்டம்' எனச் செய்யத் தயங்கும் ஒரு விஷயத்துக்கு முன்னுரிமை கொடுத்து முதலில் செய்யப் பாருங்கள். அது உங்கள் வாழ்வையே மாற்றும்.
- நீங்கள் அதிகம் விரும்பாத மனிதர்கள்தான் உங்களுக்குப் பயனுள்ள, வெளிப்படையான அறிவுரைகளைத் தருவார்கள்.
- மிக அதிகமாகத் தன்னை விரும்பும் ஒருவரையே, 'வெற்றி' தேடிச் சென்று தஞ்சமடைகிறது.
- நீங்கள் வாழ்வில் என்னவாக ஆக விரும்புகிறீர்கள் என ஆரம்பத்திலேயே முடிவு செய்துவிட்டால், அதை அடைவது சுலபம்.
- எதிர்மறையாகவே பேசும் மனிதர்களுடன் இருப்பதுதான், தோல்வியைப் பெறுவதற்கு முக்கியமான வழி. அந்த வழியை அடைத்துவிடுங்கள்.
- கவலை, மகிழ்ச்சி; பயம், துணிச்சல்; முரட்டுத்தனம், கருணை... எதைத் தேர்ந்தெடுப்பது என்பது எப்போதும் உங்கள் கையில்தான் இருக்கிறது.
- எதைச் செய்தாலும், அதைப் பற்றி முழுமையாகத் தெரிந்துகொள்ளுங்கள். நீங்கள் ஜெயிப்பதை அதன்பின் எதுவும் தடுக்காது.
- அக்கறை இல்லாமல் செய்யப்படும் எந்தச் செயலும் அற்புதமான வெற்றியை நிச்சயமாகக் கொடுக்காது.
- 'கடந்த முறை இதில் தோற்றுவிட்டோம்' என்பதை மட்டுமே காரணமாகச் சொல்லி, மீண்டும் ஒருமுறை முயற்சி செய்வதைத் தவிர்க்காதீர்கள்.
- எவ்வளவு கடினமான சூழலிலும், நீங்கள் முழு முயற்சியுடன் செய்யும் ஒரு செயல் மகத்தான பலனைக் கொடுக்கும்.
- உங்கள் சார்பாக இன்னொருவர் முடிவெடுக்க முடியாது. எல்லா முடிவுகளையும் நீங்களே எடுங்கள்.
- நீங்கள் எவ்வளவு வேகமாக உழைக்கிறீர்களோ, அவ்வளவு வேகமாக முன்னேற்றம் வந்தடையும்.
- கவனிக்கவும் கற்றுக்கொள்ளவும் தயாராக இல்லாதவர்களை வெற்றி நெருங்காது.
- உங்களை விமர்சனம் செய்ய நிறைய பேர் இருக்கலாம். அவர்கள் சத்தமாகவும் எதிர்க்குரல் எழுப்பலாம். அதற்காக நீங்கள் செய்வது தவறாகிவிடாது. மனதுக்குச் சரி என்று பட்டதைத் தயங்காமல் செய்யுங்கள்.
- தற்காலிகத் தீர்வுகளும் சுலபமான வழிகளும் நிலைத்து நிற்கும் வெற்றியைத் தராது.

**வாழ்க்கையில் அனுபவமும் முதிர்ச்சியும் கூடும்போது சில பாடங்களை எல்லோரும் கற்றுக்கொள்கிறார்கள். அப்படிக் கற்றுக்கொள்ளும் பாடங்களை வாழ்வில் பின்பற்றுவது ஒன்றே, அந்த அனுபவத்துக்கு நாம் கொடுக்கும் மரியாதை. அந்தப் பாடங்கள் இதோ:**

- வயது கூடும்போதுதான், பணத்தைவிட மேலானதாக நம்மிடம் இருக்கும் மிக அபூர்வமான செல்வம் நமது நேரம்தான் என்பதை உணர்வோம். அதைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்தக் கற்றுக்கொள்வோம். எது முக்கியமான செயலோ, அதற்கு மட்டுமே நேரம் செலவிடுவோம்.
- நாம் சேர்த்து வைக்கும் சொத்துக்களைவிட, உறவினர்கள் மற்றும் நண்பர்களுடன் நமக்கு இருக்கும் அர்த்தமுள்ள தொடர்புகளே பெரிய சொத்து என்பதை உணர்வோம். எல்லோருடனும் நல்ல உறவினைப் பராமரிப்பதை முதன்மையான கடமையாகச் செய்வோம்.
- ‘நிறைய சேர்க்க வேண்டும், இதையெல்லாம் அனுபவிக்க வேண்டும்’ என்பது போன்ற பேராசைகள் காணாமல் போய்விடும். எளிமையில் நிறைவைத் தேடுவோம். கிடைப்பதை வைத்து வாழும் மனநிறைவு வந்துவிடும்.
- பிறர் செய்யும் தவறுகளை நினைவில் வைத்திருந்து பழிவாங்கும் உணர்வும், நமக்குப் பிடிக்காததை எவர் செய்தாலும் எதிர்ப்பு தெரிவிக்கும் இயல்பும் நம்மிடமிருந்து காணாமல் போய்விடும். எவரையும் மன்னிக்கும் குணத்தைப் பெறுவோம்.
- வாழ்வில் சவால்களையும் பிரச்னைகளையும் சந்திக்கும்போது சோர்ந்து போகமாட்டோம், எரிச்சல் அடையவும் மாட்டோம். பொறுமையும் சகிப்புத்தன்மையும் கைகூடியிருக்கும். எல்லாப் பிரச்னைகளுக்கும் உடனடித் தீர்வுகளைத் தேடிப் பதற்றம் அடைய மாட்டோம்.
- எல்லாச் செயல்களையும் நூறு சதவிகிதம் துல்லியமாகச் செய்வதற்கு ஆசைப்பட மாட்டோம். அது முடியாது என்பது தெரிந்திருக்கும். நம் பலவீனங்கள் மற்றும் குறைகளை உணர்ந்து, அதற்கு ஏற்றபடி செயல்படுவோம்.
- கோபம் குறைந்து, மனத்தில் அளவற்ற கருணை நிரம்பியிருக்கும். எளிய மனிதர்களுக்கு மனப்பூர்வமாகச் செய்யும் சின்னச்சின்ன உதவிகள் மூலம் மற்றவர்களிடமும் கொடையுள்ளத்தை ஏற்படுத்த முயல்வோம்.
- பள்ளியிலும் கல்லூரியிலும் படித்ததைத் தாண்டி வாழ்க்கை முழுக்க கற்றுக்கொள்ள வேண்டியது ஏராளம் இருக்கிறது என்பதை உணர்வோம். இருக்கும் துறை சார்ந்து புதிய விஷயங்களைக் கற்று, திறமையை வளர்த்துக்கொள்வோம்.
- முதுமையின் தாக்கம் உடலில் ஏற்படுத்தும் மாற்றங்களை உணர்வோம். நோய்கள் வந்து வருத்தும்போது, உடல் மீதான அக்கறை அதிகமாகும். உடல்நிலையையும் மனநிலையையும் ஆரோக்கியமாக வைத்துக்கொள்வோம். மற்றவர்களுக்கு முக்கியத்துவம் தருவது போலவே, நமக்கும் முக்கியத்துவம் கொடுப்போம்.
- பிரச்னைகளையும் நெருக்கடிகளையும் சந்திக்கும்போதுதான் நமக்கு மன உறுதியும் வலிமையும் கிடைக்கிறது என்பதைப் புரிந்துகொள்வோம். வாழ்வின் சோதனைகளைப் புன்னகையுடன் எதிர்கொள்வோம். ஒவ்வொரு நிமிடத்தையும் மகிழ்ச்சியாக அனுபவித்து வாழ்வதற்குக் கற்றுக்கொள்வோம். ●

# அனுபவம் கற்றுத் தரும் பாடங்கள்!





# தேவதாசி முறையை ஒழித்த தமிழகக் கல்விப் புரட்சி!

தமிழகப் பொதுக்கல்விப் போராளிகள் 2

ஆயிஷா. இரா.நடராசன்

நோபல் பரிசு பெற்ற குழந்தைகள் உரிமைப் போராளி கைலாஷ் சத்யார்த்தியின் சமீபத்திய பேட்டி ஒன்றைப் படித்தேன். 'கைவிடப்பட்டவர்கள், குடும்பமின்றித் தவிக்கும் சாலைச் சிறுவர்கள், அபலைகள், பிச்சைக்காரர்கள் என்று இந்தியாவின் மக்கள் தொகையில் ஒரு கோடி குழந்தைகள் இருக்கிறார்கள்' எனும் அதிர்ச்சித் தகவலை அவர் சொல்லியிருக்கிறார். அவர் சொன்ன ஒரே ஆறுதலான விஷயம், தமிழ்நாட்டில் அத்தகைய சிறார்களின் எண்ணிக்கை இந்தியாவிலேயே மிகமிகக் குறைவு என்பது.

யுனெஸ்கோவின் அறிக்கைப்படி, ஒவ்வொரு இரண்டு நொடிகளுக்கும் ஒரு குழந்தை பள்ளியில் சேர்க்கப்பட்டால் கூட இந்தியாவில் அனைவருக்குமான பொதுக்கல்வியை எட்டிட ஒன்றரை ஆண்டுகள் ஆகும். பெண்களுக்கான இட ஒதுக்கீடு மசோதாவைக் கொண்டுவந்து வென்று விட்டதாக மார்தட்டும் ஒன்றிய அரசு, நாட்டில் பெண்கல்வியின் நிலை என்ன என்பதை அறிந்துதான் பேசுகிறதா என்பது சந்தேகமாக இருக்கிறது.

அகில இந்திய அளவில் இன்று ஒன்றாம் வகுப்பில் சேரும் 100 பெண் குழந்தைகளில் 29 குழந்தைகள்தான் பள்ளிக்கல்வியை முடிக்கிறார்கள் (Dominic and Jothi survey – 2021). தமிழ்நாட்டில் அந்த எண்ணிக்கை 77 ஆக உயர்ந்து நிற்கிறது. பள்ளிக்குள் நுழையும் 100 பெண் குழந்தைகளுமே பள்ளிக்கல்வி முடித்துக் கல்லூரியில் அடியெடுத்து வைக்க வேண்டும் என்பதுதான் நம் நோக்கம்.

தமிழகம் இப்படி தனித்து உயர்ந்திருப்பது பெண்கல்வி பற்றிய நமது அக்கறையில் மட்டுமல்ல. பெண் விடுதலை, சம உரிமை குறித்த போராட்டங்களும் அதற்குக் காரணம். அத்தகைய ஒரு பெரும் போராட்டத்தை நடத்திக் கல்விப்புரட்சியை சாதித்தவர், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி.

'மாதராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா' என்று மகாகவி பாடிய அந்த 1905–களில்கூடத் தேவதாசி முறை எனும் ஆபாசக் கொடூரம் நம் மண்ணில் இருந்தது. தேவ அடியார்கள் எனப் பெண் குழந்தைகளைக் கோயிலுக்கு நேர்ந்து விடுகிற சநாதன இந்து அவலம் அது. கோயில் திருவிழாக்களில் பாடி ஆடி பக்தர்களையும் கடவுளையும் மகிழ்விக்க என்று பொதுவில் சொல்லப்பட்டாலும், ஊர் ஜமீனில் இருந்து கோயில் அர்ச்சகர் வரை தங்களது

ஆபாச இச்சைகளால் பாம்பாகக் கொத்திக் குதறி கொன்று போட்டால்கூடச் சட்டம் தலையிட முடியாத கொடூரத்தைச் சநாதனம் அரங்கேற்றி வந்தது. இன்று இதை வாசிக்கும் பலரும் நம்ப முடியாமல் திகைக்கலாம். அந்த அளவிற்கு நாம் அதைத் தமிழக மண்ணிலிருந்து அகற்றி விட்டோம். ஆனால், உத்தரப்பிரதேசம் தொடங்கி பீகார், ராஜஸ்தான், ஏன், ஆந்திரா, கர்நாடகாவின் சில பகுதிகளில்கூட இன்றும் தொடர்கிறது.

இந்தக் கொடிய நடைமுறைக்கு முற்றுப்புள்ளி வைத்தவர், தமிழகப் பொதுக்கல்விப் போராளியான டாக்டர் முத்துலட்சுமி. அவர் வாழ்க்கையே ஒரு போராட்டம் ஆகும். வீட்டில் ஒரு வாரம் உண்ணா–பசிப்போராட்டம் நடத்திப் பள்ளிக்குச் சென்றபோது, தமிழகத்திலேயே பள்ளியில் (வருகைப் பதிவில் அணைந்து) சேர்க்கப்பட்ட முதல் பெண் குழந்தை ஆனார் அவர். 1886 ஜூலை 30–ல், புதுக்கோட்டை மகாராஜா கல்லூரியின் முதல்வர் நாராயணசாமிக்கும் சந்திரம்மாளுக்கும் மகளாகப் பிறந்தவர். கல்லூரி முதல்வராக இருந்தாலும் அன்று தன் மகளை கல்விக்கூடம் அனுப்ப முடியாது. சமூகத்தில் நிலவிய பெண் அடிமைச் சட்டங்கள் அப்படி. ஆனால் முத்துலட்சுமி தன் தந்தையின் புத்தக அலமாரியே கதி என்று வளர்ந்தார். வீட்டிலேயே அவருக்கு, தந்தை தன் ஓய்வு நேரத்தில் கல்வி போதித்தார். தாய் அவரை அவ்வப்போது பள்ளிக்குக் கூட்டிச் சென்று பள்ளியின் வராந்தாவில் உட்காரவைத்து பாடங்களைச் செவிமடுக்க வைப்பாராம். பிறகு போராடி அதே பள்ளியில் உள்ளே உட்கார்ந்தார் அவர்.

அந்தக் காலத்து மெட்ரிகுலேஷன் தேர்வை (இன்றைய பத்தாம் வகுப்பு) ஆண் உடையில் சென்று எழுதியவர் முத்துலட்சுமி. சென்னை மாகாண (அன்றைய தமிழகம், கேரளம் மற்றும் ஆந்திராவின் பெரும் பகுதி) அளவில் முதலிடம் பெற்றார். இது எப்படி? அவர் ஒரு பெண் ஆயிற்றே எனச் சநாதனவாதிகளும் ஆண் ஆதிக்க வெறியர்களும் வெகுண்டெழுந்தனர். வீட்டிற்கே தெரியாமல் தன் தந்தை முதல்வராக இருக்கும் மகாராஜா கல்லூரிக்கே விண்ணப்பித்தார் அவர். அவரது தந்தையே மனுவை நிராகரித்தார். ஏனெனில், 'கல்லூரியில் பெண்ணா' என்று பழமைவாதிகள் போர்க்கொடி தூக்கினர். ஆனால் கல்வியில் அவரது ஆர்வத்தை அறிந்த புதுக்கோட்டை மார்த்தாண்ட பைரவ தொண்டைமான் ராஜா கல்வி உதவித்தொகையோடு அவர் கல்வி கற்க இடமளித்தது வரலாறு.



இவ்வாறு தமிழகத்தில் கல்லூரி சென்ற முதல் பெண் என்ற பெருமைக்குரிய முத்துலட்சுமி, சென்னை மருத்துவக் கல்லூரியில் அறுவை சிகிச்சைத்துறையில் நுழைந்தபோது, அத்துறையில் முதல் மாணவராகத் தேர்ச்சிபெற்று தங்கப்பதக்கம் வென்றவர். பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆரோக்கியம் குறித்து இங்கிலாந்தில் நடைபெற்ற பயிற்சிக்கு அவர் தேர்வானார். 'பெண் கடல் தாண்டக்கூடாது' (மீண்டும் சநாதனம்) என்று குடும்பமே எதிர்த்தபோது, டாக்டர் டி.சுந்தரரெட்டி என்பவரைத் (சமூக–போராட்ட வாழ்வில் தலையிடக்கூடாது எனும் நிபந்தனையுடன்) திருமணம் செய்துகொண்டு டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியாக 1914–ல் இங்கிலாந்து சென்றார். அப்படி அவர் பயணிக்க நிதியுதவி செய்த மாமனிதர், நீதிக்கட்சித் தலைவர் பனகல் அரசர் ஆவார். இங்கிலாந்தில் அன்னி பெசன்ட் அம்மையாரைச் சந்தித்து இந்திய மகளிர் சங்கம் அமைக்க ஆதரவு கேட்டார்.

இந்தியா திரும்பியபோது தான் ஒரு தேவதாசிக்குப் பிறந்தவர் எனும் அவதூறு பிரசாரம் தன் மீது வீசப்படுவதை அறிந்து கொதித்தார் அவர். தனது தாய் சந்திரம்மாள் இசைவேளாளர் சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதால் இப்படிப் பழிக்கும் சநாதனச் சதியை முறியடிக்க, பெண்கல்விப் போராளியாக ஆனார் முத்துலட்சுமி. அடையாறில் உள்ள தன் இல்லத்தில் அவ்வை இல்லம் எனும் அந்தக் கல்விப்புரட்சியைத் தொடங்கினார். நாமக்கல் சென்றார். கோயிலுக்கு நேர்ந்து விடப்பட்டுத் தேவதாசிகள் ஆக்கப்பட்ட பெண் குழந்தைகளான மங்கை, மாலதி, சாந்தா ஆகியவர்களை மீட்டுத் தனது அவ்வை இல்லத்தில் சேர்த்தார். அவர்கள் ஏழு, எட்டு வயதே ஆன பிஞ்சுக் குழந்தைகள். அவ்வை இல்லத்திற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது. நீதிக்கட்சி அவரை ஆதரித்து, சென்னை மாகாண சட்டமேலவை உறுப்பினராக்கி அதிகாரம் அளித்தது வரலாறு.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி சட்டமேலவை துணைத்தலைவராகி குழந்தைகள் திருமணத் தடுப்புச் சட்டம், கோயில்களில் தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம், விலைமாதர் தடுப்புச் சட்டம் என

அடுத்தடுத்து சாதித்தார். இந்தியா விடுதலை அடையும் முன்பே, தமிழகத்தில் 1930–ம் ஆண்டே இந்தச் சட்டங்கள் மாகாண அரசால் இயற்றப்பட்டுவிட்டன. பெண்களின் திருமண வயதை 14 ஆகவும் பிறகு 16 ஆகவும் உயர்த்தியவர் அவர். ‘உடன்கட்டை ஏறும் கொடுமையின் வலி சில நிமிடங்கள்தான். ஆனால் குழந்தைத் திருமணம், குழந்தைப் பிரசவ வலி, குழந்தைப் பருவ கைம்மைக்கோலம், இவை வாழ்நாள் முழுதும் வலி தருபவை. இதற்குக் கல்வி ஒன்றே மாற்று’ என முழங்கியவர் அவர். உப்பு சத்தியாகிரகப் போராட்டத்தில் மகாத்மா காந்தி கைது செய்யப்பட்டபோது, அதற்கு எதிர்ப்பு தெரிவித்து சென்னை மாகாண சட்டமேலவை உறுப்பினர் பதவியை முத்துலட்சுமி ராஜினாமா செய்தார்.

அவ்வை இல்லம், தேவதாசி முறையிலிருந்து மீட்கப்பட்ட பெண்களுக்கான கல்வி நிலையம் மட்டுமல்ல, அபலைகள், கைவிடப்பட்ட பெண்கள், இளம் கைம்பெண்கள், விபசாரத்திலிருந்து மீட்கப்பட்டவர்கள் என்று 700–க்கும் மேற்பட்ட பெண் குழந்தைகள் கல்விகற்ற புரட்சியின் புயல் மையமாகத் திகழ்ந்தது. ‘பெண்களுக்கு, அதுவும் தேவதாசிகளுக்குப் படிப்பு ஏறாது’ எனக் கேலி பேசிய சமூகத்தில், தான் மீட்டவர்களில் சாந்தாவை மருத்துவராக்கிக் காட்டினார் டாக்டர் முத்துலட்சுமி. மங்கை ஒரு சிறந்த மருத்துவச் செவிலியராகவும், மாலதி ஒரு பள்ளித் தலைமை ஆசிரியையாகவும் உயர்ந்து காட்டினார்கள்.

1947, இந்திய விடுதலையின்போது டெல்லி செங்கோட்டையில் முதல் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு முதன்முதலில் தேசியக் கொடி ஏற்றிய நிகழ்வில் பங்கேற்க அழைக்கப்பட்ட சிலரில் ஒருவர் டாக்டர் முத்துலட்சுமி. தேவதாசி முறையிலிருந்து மீட்கப்பட்டுக் கல்வி கற்ற ஆறு மாணவிகளுடன் அவர் கலந்து கொண்டது எத்தனை பெரிய எழுச்சிச் செய்தி. முத்துலட்சுமி அம்மையார், தான் தொடங்கிய சென்னை அடையாறு புற்றுநோய் மருத்துவமனையின் தலைமைப் பொறுப்பை டாக்டர் சாந்தாவிடம் ஒப்படைத்ததும், தன்னிகரற்ற சேவையின் உலக அடையாளமாக டாக்டர் சாந்தா வரலாற்றில் இடம் பெற்றதும் தமிழகக் கல்விப் புரட்சியின் மகத்தான சாதனை!

தமிழகப் பொதுக்கல்வி – குறிப்பாகப் பெண் கல்வியின் அயராத போராளியான டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியை நாம் மறக்கவே கூடாது. ‘டாக்டர் முத்துலட்சுமி – ஒரு சகாப்தம்’ எனும் தலைப்பில் டாக்டர் சாந்தா எழுதியுள்ள நூல், கல்விச் செயல்பாட்டாளர்கள் அனைவரும் கண்டிப்பாக வாசிக்க வேண்டிய நூல். ●


# உங்கள் வீட்டுக்கே வர வேண்டுமா?

**யாதும்** நமது கல்வி - நமது சூழல் - நமது பணி | **சந்தாதாரர் ஆகுங்கள்!**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | | | |
| முகவரி | | | |
| தொலைபேசி | | அலைபேசி | |
| மின்னஞ்சல் | | | |

டிக் செய்யவும்

☐ ஓர் ஆண்டு ரூ.240

☐ இரண்டு ஆண்டுகள் ரூ.450

காசோலை / வரைவோலை மூலம் அனுப்பலாம். KARU CREATIONS என்ற பெயரில் செக் / டி.டி. அனுப்பவும். பின்புறம் உங்கள் பெயர், ஊர் எழுதவும்.

இப்படிவத்தை நிரப்பி செக் / டி.டி.யுடன் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்:

**யாதும்**
தரு மீடியா (பி) லிட்.,
10/55, ராஜா தெரு, மேற்கு மாம்பலம்,
சென்னை – 600 033.
போன்: 99529 20801
email: contactyadhum@gmail.com



# எதிர்க்காத மனிதரை ஏய்ப்பது தவறு!

வலிமையற்ற ஒருவனை, வலிமையான ஒருவன் தொடர்ச்சியாகச் சுரண்டுகிறான், அடிக்கிறான், தொல்லை செய்கிறான். வலிமையற்றவன், சூழ்நிலை காரணமாக எதிர்ப்பு தெரிவிக்காமல் இருக்கலாம். ஆனால் அவன் மனம், பழிவாங்கும் ஒரு தருணத்தை எதிர்பார்த்தே இருக்கும்.

ஏனென்றால், இரண்டு மனித உடல்கள் வேறு வேறாக இருக்கலாம். அவை பிறந்த சூழ்நிலை வேறு வேறாக இருக்கலாம். ஆனால், மனதில் இருக்கும் தன்மானமும் உணர்வுகளும் சமமாகவே இருக்கும். ஒருவர் தனக்குத் தீங்கிழைத்தால், அதை மனத்தால் தாங்கிக்கொள்ளவே முடியாது. இதைச் சொல்லும்படியான அழகான ஈசாப் நீதிக்கதை இது:

ஆடு ஒன்று மேய்ச்சலுக்குப் போகும் வழியில் அதைப் பார்த்தது. ஒரு சுவருக்கு அந்தப் பக்கம் இருக்கும் திராட்சைக் கொடி ஒன்று, எதிர்பக்கம் தன் இளம் தளிர்களைக் காட்டி நின்றதைப் பார்த்தது. 'எப்போதும் புல்லைத்தானே உண்போம். இப்போது புதுமையாக ஏன் திராட்சை இளம் தளிர்களைத் தின்னக் கூடாது' என்று நினைத்தது.

மெல்ல சுவரை ஒட்டி நின்று, எம்பி தன் காலால் உடலை ஏற்றிக் கஷ்டப்பட்டு அந்தத் திராட்சைத் தளிர்களைத் தின்றது. அப்போது திராட்சைக் கொடி பேசியது.

"ம்ம்ம்... நல்லா சாப்பிடு. என்னோட இளம் தளிர்களை நல்லா சாப்பிடு. ஊர்ல எவ்வளவோ புல்லு விளைஞ்சாலும் என்னையே தின்னு!"

''செடி, கொடி உண்பது என் வழக்கம். அப்படித்தான் உன்னையும் தின்கிறேன்" என்றது ஆடு.

"அதைத்தான் சொல்கிறேன், நீ என் இலைகள் அனைத்தையும் சாப்பிடு'' என்றது திராட்சைக் கொடி.

ஆடு குழப்பத்துடன் திராட்சைக் கொடியையே பார்க்க, திராட்சைக் கொடி தொடர்ந்தது. "என்னை வேர் வரைக்கும் கூடச் சாப்பிடு. அப்படிச் சாப்பிட்டாலும் நான் மறுபடி வளர்வேன்!"

"வளர்ந்து?" ஆடு கேட்டது.

''வளர்ந்து வெள்ளைப்பூ பூத்து பிஞ்சு பிடிப்பேன்..."

"பிஞ்சு பிடித்து..?"

"பிஞ்சு பிடித்து, பின் காயாகி, முதிர்ச்சியாகி சுவையான திராட்சைப் பழமாவேன்!"

"பழமாகி என்ன செய்வாய்?"

"பழமாகி, சுவையான திராட்சை ரசமாவேன். அந்தத் திராட்சை ரசத்தைத்தான் உன்னைக் கடவுளுக்குப் பலி கொடுக்கும்போது உன் மேல் தெளிப்பார்கள். அப்போது நான் உன்னை நோக்கிச் சிரிப்பேன்" என்றது திராட்சைக் கொடி. அப்படிச் சொல்லும்போது கோபத்தால் திராட்சைக் கொடியின் உடல் குலுங்கியது.

இந்த ஆவேசத்தைப் பார்த்த ஆடு பயந்து நடுங்கியது. 'நமக்குத்தான் கால்கள் இருக்கின்றன. ஓடி ஆடலாம், திராட்சைக் கொடியால் நகரமுடியாது என்பதால், கேள்வியே இல்லாமல் அதைத் தின்னலாம் என்று நினைத்தது தப்பு. இந்தத் திராட்சைக் கொடி என் பலிக்குத் தீர்த்தமாக வருவேன் என்பது வரை யோசித்து வைத்திருக்கிறதே' என்று நினைத்து நகர்ந்தது. அதன்பிறகு திராட்சைக் கொடி பக்கமே அது போகவில்லை.

எளிய கதை என்றாலும், வாழ்க்கையில் பின்பற்றத்தக்க முக்கியமான கருத்து இதில் இருக்கிறது. ஒரு மனிதன் எதிர்ப்பு தெரிவிக்கவில்லையே என்று திரும்பத் திரும்ப அவமானப்படுத்துவது, சுரண்டுவது தவறு என்பதை இக்கதை நமக்குச் சொல்கிறது.

**– விஜயபாஸ்கர் விஜய்**

# உச்சகட்ட உளைச்சல் தரும் கோச்சிங் முறை!

ஜே.இ.இ தேர்வு, நீட் தேர்வு, தற்போது மத்தியப் பல்கலைக்கழகங்களுக்கான க்யூட் தேர்வு என்று நுழைவுத் தேர்வுகளும் தகுதித் தேர்வுகளும் அதிகரித்தபடி இருக்கின்றன. முன்னணிக் கல்வி நிறுவனங்களில் எப்படியாவது பிள்ளைகளைச் சேர்த்துப் படிக்க வைத்துவிட வேண்டும் என்ற பெற்றோர்களின் எண்ணம், கோச்சிங் தொழிலைக் கொழிக்க வைக்கிறது. இதற்கு மோசமான உதாரணம், ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள கோட்டா நகரம்.

ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள கோட்டா நகரத்தை 'கோச்சிங் சென்டர்களின் தாயகம்' என்பார்கள். நீட், ஜே.இ.இ போன்ற தேர்வுகளுக்குப் பயிற்சியளிப்பதற்காகச் சிறிதும் பெரிதுமாக சுமார் 500 பயிற்சி மையங்கள் கோட்டாவில் இருக்கின்றன. பல பயிற்சி மையங்கள் கூடவே பள்ளியையும் நடத்துகின்றன. இந்தியா முழுக்க இருந்து மாணவர்கள் கோட்டாவுக்குச் செல்கிறார்கள். லட்சங்களில் கட்டணம் செலுத்தி கோச்சிங் சேர்கிறார்கள். பெயருக்குப் பள்ளியில் சேர்த்துவிட்டு, முழுக்க நுழைவுத்தேர்வுகளுக்குக் கோச்சிங் கொடுப்பார்கள். இப்படி கோட்டாவில் இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் ஜே.இ.இ, நீட் தேர்வுகளுக்காகப் பயிற்சி பெறுகிறார்கள். ஒரு நாளுக்கு 15 முதல் 18 மணி நேரம் கோச்சிங், கூடவே தேர்வுகளும் நடத்தப்படும்.

கோட்டா போலவே இப்போது தென்னிந்திய மாநிலங்களின் கோச்சிங் மையமாக ஹைதராபாத் மாறிவருகிறது. தமிழ்நாட்டிலோ, நாமக்கல் உள்ளிட்ட இடங்களில் இருக்கும் ரெசிடென்ஷியல் பள்ளிகள் பலவும் கோச்சிங் நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு பள்ளி வளாகத்திலேயே கோச்சிங் வகுப்புகளை நடத்துகின்றன.

கோட்டா என்ற ஒற்றை கோச்சிங் மையம் போல ஒட்டுமொத்த தேசமே மாறுவதில் பல பிரச்னைகள் உள்ளன. கோட்டாவில் கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டுமே 38 மாணவர்கள் தற்கொலை செய்துகொண்டிருக்கிறார்கள். மாணவர்களுக்கு நம்பிக்கை கொடுத்து வாழவைக்க வேண்டிய கல்வி, ஏன் இப்படி மாறுகிறது?

- கோச்சிங் சென்டர்களில் லட்சங்களைக் கொட்டிப் படித்து, ஒரு தேர்வில் அதிக மார்க் எடுத்து முன்னணி கல்வி நிறுவனங்களில் சேரமுடியும் என்ற நிலை வரும்போது, அந்தத் தேர்வின் மீதே கேள்வி எழுகிறது. எல்லோருக்கும் சமநிலைப் போட்டி வாய்ப்பை அது தருவதில்லை.

- இந்த ஆண்டு எம்.பி.பி.எஸ் சேர்க்கைக்கான நீட் தகுதித் தேர்வு எழுதி முதல் 50 இடங்களைப் பிடித்த மாணவர்களில் 38 பேரிடம் 'தி இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழ் ஓர் ஆய்வு நடத்தியது. அந்த 38 பேரில் ஒரே ஒருவரைத் தவிர மற்ற எல்லோருமே கோச்சிங் சென்டர் போய் படித்தவர்கள் என்ற உண்மை அதில் தெரியவந்தது. ஏற்கனவே அரசுப்பள்ளி மாணவர்களுக்கும் தனியார் பள்ளி மாணவர்களுக்கும் இடையில் பெரும் ஏற்றத்தாழ்வு நிலவும் சூழலில், கோச்சிங் சென்டர்கள் அந்த ஏற்றத்தாழ்வை இன்னும் அதிகரிக்கின்றன.

- இன்னொரு பக்கம், கோச்சிங் சென்டர்களில் மாணவர்களுக்குத் தரப்படும் அழுத்தம், அவர்களை மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாக்குகிறது. தினமும் 15 மணி நேரத்துக்குக் குறையாமல் தொடர்ச்சியாக இரண்டு, மூன்று ஆண்டுகள் படிப்பது, அவர்களை மிகுந்த மனவேதனையில் தள்ளுகிறது. விளையாடவோ, வேறு பொழுதுபோக்குகளுக்கோ வாய்ப்பு அளிக்கப்படாமல், குடும்பத்தைப் பிரிந்துவந்து புதிய சூழலில் தங்கிப் படிப்பது அவர்களுக்கு மிரட்சியை ஏற்படுத்துகிறது. இதைத் தாங்க முடியாமல்தான் பலர் விபரீத முடிவு எடுக்கிறார்கள்.

**இந்த நிலையை மாற்ற என்ன வழி?**

- மாணவர்களின் தேவைக்கு ஏற்றபடி தரமான உயர்கல்வி நிறுவனங்கள் இல்லை என்பதுதான் இங்கே பிரச்னை. ஒவ்வோர் ஆண்டும் பல லட்சம் மாணவர்கள் எஞ்சினியரிங் படிக்க ஆசைப்படுகிறார்கள். ஆனால், தரமான கல்வி நிறுவனங்கள் இங்கு மிகக்குறைவு. அவற்றில் சேர்ந்து படித்தால் மட்டும்தான் நல்ல எதிர்காலம்




உண்டு என்பதால், எல்லோரும் முட்டி மோதுகிறார்கள். சராசரி மாணவர்களைக்கூட இங்கு சேர்த்துவிடும் அளவுக்கு கோச்சிங் சென்டர்கள் மாற்றும் என்று நம்பி, பலரும் லட்சங்களைக் கொட்டிப் பிள்ளைகளைச் சேர்க்கிறார்கள். மாணவர்களின் தேவைக்கு ஏற்ற அளவுக்கு நல்ல கல்வி நிறுவனங்கள் பெருகினால், இந்தப் போட்டி குறையும்.

● அமெரிக்காவில் நம்பர் 1 கல்வி நிறுவனத்துக்கும், சுமாரான கல்வி நிறுவனத்துக்கும் இடையே இடைவெளி மிகக் குறைவாக இருக்கும். சுமாரான கல்வி நிறுவனத்தில் கூட நல்ல பேராசிரியர்கள் இருப்பார்கள், பாடத்திட்டம் நவீன மாற்றங்களுடன் இருக்கும், தரமான கல்வி சாத்தியம். அதுபோன்ற நிலை இங்கே வர வேண்டும்.

● கேம்பஸ் இன்டர்வியூக்கள் பற்றி வெளியாகும் செய்திகள், பெற்றோர்கள் மனதைப் பெரிதும் பாதிக்கின்றன. 'ஐ.ஐ.டி மாணவருக்கு ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் சம்பளத்தில் வேலை' என்று ஒரு செய்தி வெளியாகும்போது, அந்த இடத்தில் தங்கள் பையனைப் பொருத்திப் பார்க்கிறார்கள் பலர். ஐ.ஐ.டி–யில் படிக்கும் ஆயிரக்கணக்கான மாணவர்களில் ஒன்றிரண்டு பேருக்கு மட்டுமே இப்படி உயர் சம்பளம் கிடைக்கும். மற்றவர்கள் சராசரி ஊதியமே பெறுகிறார்கள் என்ற உண்மையைப் பலரும் கவனிப்பதில்லை.

● உயர்கல்விக்கு அரசு ஒதுக்கும் நிதி மிகக்குறைவு. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வெறும் 0.7% அளவுக்கே உயர்கல்விக்குப் போகிறது. வளர்ந்த நாடுகளுடன் ஒப்பிடுகையில் இது மிகக் குறைவு. இதிலும், மத்திய அரசின் ஒதுக்கீடு பெருமளவு ஐ.ஐ.டி போன்ற நிறுவனங்களுக்கே போகிறது. இந்திய உயர்கல்விச் சூழல் மாற வேண்டும். இன்னும் நிறைய ஐ.ஐ.டி மற்றும் என்.ஐ.டி, மத்தியப் பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட வேண்டும். மாநில அரசுகளின் கல்வி நிறுவனங்களும் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். தரமான தனியார் கல்வி நிறுவனங்களுக்கு அரசு ஆதரவு கிடைக்க வேண்டும்.

● கல்விக்கடன் நடைமுறைகள் இப்போது மிகவும் சிக்கலாகி இருக்கின்றன. இந்தநிலை மாற வேண்டும். ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில், கல்விக்கட்டணத்தில் ஒரு பகுதியை மட்டும் படிக்கும்போது செலுத்திவிட்டு, வேலைக்குப் போன பிறகு மீதியைச் செலுத்தும் நடைமுறை இருக்கிறது. இந்தியா இதுபோன்ற மாற்றங்களை அரவணைக்க வேண்டும்.



# தேடல் பயிற்சிப் பட்டறை!

அகரம் விதைத் திட்டத்தில் 2022–ம் ஆண்டு சேர்ந்த மாணவர்களுக்குத் தேடல் பயிற்சிப் பட்டறை நடைபெற்றது. மாணவர்கள் படிக்கும் துறைகள் அடிப்படையில் இது 10 விதமாகப் பிரிக்கப்பட்டது. துறை சார்ந்த ஆளுமைகள் வந்து மாணவர்களுடன் கலந்துரையாடினர். மாணவர்களின் சமூக நோக்கையும் வேலைவாய்ப்பையும் தூண்டும் தேடலாக இந்தப் பயிற்சிப் பட்டறை இருந்தது.

Bio Chemistry மாணவர்கள், அத்துறைக்கான வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் மற்றும் உயர்கல்வி பற்றி அறிந்துகொண்டனர். Computer மாணவர்கள், தொழில் நிறுவனங்களில் அவர்களுக்கு இருக்கும் வாய்ப்புகள் சார்ந்து அவர்களின் தேடல்களும் கற்றல்களும் என்ன என்பதை அறிந்துகொண்டனர். Engineering மாணவர்கள், IOT – Internet of things, AI Basics, Swan Technology மற்றும் Computer vision போன்ற பயிற்சிகள் பெற்றனர். இலக்கியம் படிக்கும் மாணவர்கள், மொழியில் ஆளுமை பெற்று, கற்பனைத் திறனை வளர்த்துக்கொண்டால் எதிர்காலத்தில் பெறும் வாய்ப்புகள் என்னென்ன என்று அறிந்துகொண்டனர். இப்படி ஒவ்வொரு துறை மாணவர்களுக்கும், தங்களின் தேடல் எதுவாக இருக்க வேண்டும் என்பதை உணர்த்தும் வகையில் பயிற்சிப் பட்டறை அமைந்தது.

# விதை பயிற்சிப் பட்டறை!

அகரம் விதை மாணவர்களின் கற்றலை மேம்படுத்தும் வகையில் பல செயல்பாடுகள் தரப்படுகின்றன. அவற்றில் முக்கியமான ஒன்று, அகரம் பயிற்சிப் பட்டறை. முதல் ஆண்டு பயிலும் அகரம் விதை மாணவர்களுக்கு சென்னை சத்யபாமா பல்கலைக்கழகத்தில் 26.08.2023 மற்றும் 27.08.2023 ஆகிய இரண்டு நாட்கள் பயிற்சிப் பட்டறை நடந்தது.

முதல் நாளில் ‘நான் யார், எண்ணம், செயல்’ பற்றிய பயிற்சி கொடுக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து மறுநாளில் ஒருவருக்கொருவர் பழகவும் உரையாடவும் சில பொழுதுபோக்கு அமர்வுகள் நடத்தப்பட்டன. அடுத்து, மனதைக் கவரும் பல்வேறு வேடிக்கைகள் திறந்தவெளி அரங்கில் நடத்தப்பட்டன.

இதைத் தொடர்ந்து இளமைப் பருவம் தொடர்புடைய மாற்றங்கள் மற்றும் மனித விழிப்புணர்வில் அதன் தாக்கங்கள் குறித்து பகிர்ந்துகொள்ளப்பட்டது. பின்பு சமூக விழிப்புணர்வின் முக்கியத்துவம் மற்றும் பொறுப்புகளை மாணவர்களுடன் நிபுணர் பகிர்ந்துகொண்டார். அதனைத் தொடர்ந்து 18 தன்னார்வலர்கள் (வழிகாட்டி) மாணவர்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பாலின உணர்திறன், பாலினச் சமத்துவம் பற்றியும் மாணவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. துறைநோக்குநிலை குறித்த வழிகாட்டுதல், சீனியர் மாணவர்கள் மூலம் தரப்பட்டது.



# விதை மாணவர்களுக்குத் தூண்டல் பட்டறை!

அகரம் பயிற்சிப் பட்டறை, மாணவர்களின் திறன் மற்றும் திறமைகளை மேம்படுத்துவதற்காகத் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. 2023–ம் ஆண்டு விதைத் திட்டத்தில் சேர்ந்த மாணவர்களுக்கு, சென்னை சத்யபாமா பல்கலைக்கழகத்தில் இரண்டு நாட்கள் பயிற்சிப் பட்டறை நடந்தது. அதில் ஒருவருக்கொருவர் பழகவும் உரையாடவும் சில பொழுதுபோக்கு அமர்வுகள் நடத்தப்பட்டன. இதைத் தொடர்ந்து தன்னார்வக் குழுவினரால் நோக்குநிலை அமர்வு மாணவர்களின் பெற்றோர்களுக்கு நடத்தப்பட்டது. அடுத்து திரு. ஜெயச்சந்திரன் மற்றும் அவரது குழுவினர் மனதைக் கவரும் பல்வேறு நடவடிக்கைகளை நடத்தினர். சிறந்த தலைவர்களின் உத்வேகமூட்டும் கதைகள் மாணவர்களுக்குச் சொல்லப்பட்டன. அடுத்த இளமைப் பருவ மாற்றங்கள் மற்றும் அவற்றின் தாக்கங்களை திருமதி. விமலா அவர்கள் பகிர்ந்துகொண்டார்.

சமூக விழிப்புணர்வின் முக்கியத்துவம் மற்றும் பொறுப்புகளை மாணவர்களுடன் பகிர்ந்துகொண்டார் திருமதி. மதிவதினி. இந்தியாவிலும் வெளிநாட்டிலும் உள்ள உயர்கல்வி வாய்ப்புகள் மற்றும் கிடைக்கும் உதவித்தொகைகள் பற்றி திரு. விஜய் பகிர்ந்துகொண்டார். அதனைத் தொடர்ந்து திருமதி. ஷெரின் 'நான் யார்' என்ற தலைப்பில் உத்வேகமூட்டும் கதையைப் பகிர்ந்துகொண்டார்.





# அந்த அனுபவம் போதும்!

ஒரு குடும்பத்தில் இருக்கும் நான்கு பேர்களுக்குள், உறவுகளைப் பராமரிப்பதற்கான கற்றல் எப்படி நிகழ்கிறது என்பதற்கான நான்கு சம்பவங்கள் இவை.

அப்பாவும் அம்மாவும் காரில் போய்க்கொண்டிருந்தனர். அம்மா கார் ஓட்ட, அப்பா அருகில் அமர்ந்து வந்தார். இருவரும் பேசிக்கொண்டே வந்தனர். உரையாடல் நின்ற ஒரு தருணத்தில், அம்மாவுக்கு லேசாகத் தூக்கம் வந்தது. தூக்கக் கலக்கத்தில் கைகள் தளர்ந்துவிட, கார் திசைமாறிச் சாலையோரம் சென்று ஒரு மரத்தில் மோதியது. நல்லவேளையாகக் கடைசி நிமிடத்தில் அவர் பிரேக் பிடிக்கவே, காருக்கும் அவர்களுக்கும் பெரிதாகச் சேதாரம் இல்லை.

விஷயம் கேள்விப்பட்டு மகன் பதறிப் போய் வந்து விசாரிக்க, “ஆமாம், கார் ஓட்டும்போதே நான் தூங்கிட்டேன். அப்பா ஒழுங்கா கவனிச்சிருந்தா இது ஆகியிருக்காது” என்று அம்மா அவர் மீது பழி போட, அப்பா திகைத்தார்.

இன்னொரு நாள்... “என் பிறந்தநாளைக்கூட நினைவு வைத்து வாழ்த்துச் சொல்லவும் இல்லை, பரிசும் வாங்கித் தரவில்லை” என்று கோபித்துக்கொண்டார் அம்மா. ‘அடடா, எப்படி மறந்தோம்’ என்று அப்பா திகைத்தாலும், அழகாகச் சமாளித்தார். “உனக்குத்தான் எப்போதும் வயதாவதே இல்லையே! அப்படியே இருக்கிறாய். அதனால் எனக்கு ஞாபகம் வராமல் போனது” என்று அவர் சொல்ல, அம்மா அமைதியாகிவிட்டார்.

மகள் திடீரென ஒரு நாள் வந்து, “எனக்கு ஹோட்டல்ல வேலை கிடைச்சிருக்கு. கிச்சனையும் ரெஸ்டாரன்ட்டையும் சுத்தமாவும் அழகாவும் வச்சிக்கறது என் வேலை” என்று சந்தோஷமாகச் சொன்னாள்.

அம்மாவுக்குத் திகைப்பு. “ஆச்சர்யமா இருக்கே! நீ வீட்டுல காபி குடிச்ச டம்ளரைக்கூடக் கழுவினது இல்லையே. இதையெல்லாம் எப்படிச் செய்வே?” என்று கேட்டார். “இத்தனை வருஷமா நீ வேலை செய்ததை எல்லாம் வேடிக்கை பார்த்தேனே, அந்த அனுபவம் போதும் அம்மா” என்றாள் மகள்.

தினமும் நண்பர்களுடன் ஊர் சுற்றிவிட்டுத் தாமதமாக வீட்டுக்கு வந்துகொண்டிருந்த மகனைக் கடுமையாகக் கண்டித்தார் அப்பா. அதனால் ஒருநாள் கோபித்துக்கொண்ட அவன், ‘‘நான் வீட்டைவிட்டு போகப் போகிறேன்” என்று அறிவித்தான். ஒரு பேக் எடுத்து வைத்து, தன் துணிகள், புத்தகங்கள், பொருட்களைச் சேகரித்து அதில் அடுக்கத் தயாரானான்.


“இந்த வயசுல இவனுக்கு எப்படி இப்படி ஒரு நினைப்பு வந்தது?’’ என்று அம்மா கலங்க ஆரம்பித்தார். அப்பா நிதானமாக மகனை அணுகினார். “வீட்டை விட்டுப் போகப் போறே, சரி! பசி எடுத்தா என்ன செய்வே?’’ என்றார். மகன் யோசித்து, “வீட்டுக்கு வந்து சாப்பிட்டுட்டுத் திரும்பப் போயிடுவேன்” என்றான்.

“பணம் தீர்ந்து போனா என்ன செய்வே?” என்றதற்கு, “வீட்டுக்கு வந்து உங்ககிட்ட கேட்பேன்’’ என்றான். ‘‘துணியெல்லாம் அழுக்காகிட்டா?’’ என்று கேட்டதும், “அம்மாகிட்ட கொண்டுவந்து கொடுத்து துவைக்கச் சொல்வேன்’’ என்று பதில் சொன்னான்.

அப்பா உடனே அம்மா பக்கம் திரும்பி, ‘‘பையன் வீட்டைவிட்டு ஓடிப் போக நினைக்கலை. நம்ம கன்ட்ரோல் இல்லாம ஹாஸ்டல்ல தங்க நினைக்கிறான்’’ என்றார்.



Owned, Published by T.J. GNANAVEL, 10/55, Raju Street, West Mambalam, Chennai - 600 033 &
Printed by B. ASHOK KUMAR at RATHNA OFFSET PRINTERS, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014. Editor : T.J. GNANAVEL


திருக்குறள் 100
வள்ளுவர் வழியில் வாழ்ந்தவர்கள் வரலாற்றுடன் குறள்
சிவகுமார்

Yadhum Monthly - Registered with the Registrar of Newspapers for India under No. TNTAM/2016/69050.
Postal Registration No. TN/CC(S)DN/612/22-24.
WPP License No - TN/PMG(CCR)/WPP 665/2022-2024 Date of Publication First week of every month.
Posted at Egmore RMS (Patrika Channel) Posted on 5th to 11th of every month.



மரங்களால் சூழப்பட்ட மழைக்காடுகளே
மனிதர்களைக் காக்கும் இயற்கையின் சுவாசப் பை.
வனங்களை வளர்ப்பதில் கவனம் கொள்வோம்;
இணைந்தே நாம் நன்மைகள் பெறுவோம்.




மதிப்பிற்குரியவர்களுக்கு...
RAMRAJ ©
காட்டன்

- வேஷ்டிகள்
- சர்ட்டுகள்
- பனியன்கள்

Shop online @ www.ramrajcotton.in
கம்பெனி ஷோரூம் மற்றும் முன்னணி ஜவுளி நிறுவனங்களில் கிடைக்கும்
Follow us RamrajCottonofficial ramrajcotton ramrajcottonmedia


If undelivered
please return to

**யாதும்**
தரு மீடியா (பி) லிட்.,
10/55, ராஜா தெரு, மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033.
போன்: 99529 20801